REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஏப்ரல் 16 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

89
1932 - 2021

வரு. 89 இல. 89 | April 16, Friday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

## சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகிறார்

### புது வருடத்தின் பின் திகதி அறிவிப்பு



சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கே இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மாத இறுதியில்

06



தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது பாரியார் அயோமாவுடன் இணைந்து தனது இல்லத்தில் மிகவும் எளிமையாக புதுவருட பாரம்பரிய சடங்குகளில் ஈடுபட்டார்.

## 5000 ரூபா கொடுப்பனவு தொடர்ந்து இடம்பெறும்

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதுவருடத்தையொட்டி சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவு 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினமும் தொடர்ச்சியாக அந்த நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மேற்படி வேலைத் திட்டத்தை அரசாங்கம் கடந்த 12ஆம் திகதி ஆரம்பித்த நிலையில் நேற்று முன்தினம் புதுவருடத்தை யொட்டி அதற்கான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும் இதுவரை மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக இனங்காணப்பட்டிருந்த 75 வீதமானவர்களுக்கு அந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க இதுவரை

06



தமிழ், சிங்கள புத்தாண்டில் மரக்கன்று நடும் சுபநேரமான இன்றைய தினத்தில் (16) நடுவதற்காக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு வெண் சந்தன மரக்கன்றொன்றை நேற்று (15) கால்டன் இல்லத்தில் வைத்து வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.

### 30 இலட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபா; 15 பில். ரூபா அரசினால் ஒதுக்கீடு

# புதுவருட காலத்தில் மக்களின் கஷ்டத்தை போக்கும் திட்டம்



### பசிலின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி, பிரதமர் அறிவுறுத்தல் பிரகாரம் ஏற்பாடு

**(ஷம்ஸ் பாஹிம்)**

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் 3 மில்லியன் குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க அரசு ரூ .15 பில்லியனை செலவிட்டுள்ளது. பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்த விசேட புத்தாண்டு கொடுப்பனவு ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் பயனாளர்களுக்குவழங்கப்பட்டது.

ஏப்ரல் 12 ஆம் திகதி இந்தகொடுப்பனவு 12 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டது.

06



## 24 மணிநேரத்தில் 123 விபத்துக்கள்

### 10 பேர் உயிரிழப்பு

நாட்டில் நேற்று (வியாழக்கிழமை) காலை 06 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரப் பகுதியில் வீதி விபத்துக்கள் காரணமாக பத்து மரணங்கள் பதிவாகியுள்ளன.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது விபத்துக்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் மா

06

அதிவேக நெடுஞ்சாலைகளில்


## நான்கு நாட்களில் 140 மில்.வருமானம்



இலங்கையிலுள்ள அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளின் மொத்த வருமானமானது, கடந்த 4 நாட்களில் 140 மில்லியன் ரூபாய் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கடந்த 8ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதி வரை, இந்த வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 9,10ஆம் திகதிகளில் மாத்திரம் 70 மில்லியன்

06





## ஐ.தே.க தேசிய பட்டியல் ரணிலுக்கே!



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதத்திற்குள் தனது கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் ஆசனத்தை ஏற்றுக்கொள்வார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

06

## இந்திய கடற்படைக் கப்பல் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம்

### இரு நாட்டு கடல் பாதுகாப்பை அதிகரிக்க முயற்சிகள்

இந்தியா இலங்கை நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். ரான்விஜய் நீர்மூழ்கிக் கப்பல், 3 நாட்கள் நல்லெண்ண பயணமாக நேற்று முன்தினம்(14) இலங்கைக்கு வந்தடைந்து.


இது குறித்து இந்திய தூதரகம்

06



## 109 வயதில் காலமான வேலுப்பிள்ளை ஐயா

### புதனற்று இறுதிக்கிரியை நடைபெற்றது



இலங்கையில் 100 வயதை தாண்டியும் வாழும் சிலரில் ஒருவரான ஓய்வு பெற்ற

06

### விக்கல் வீராச்சாமி



மூத்த தமிழ் தலைவர் ஐயா இந்த முறை புது வருட வாழ்த்து செய்தி தெரிவிக்க வில்லையோ.....

இல்லையே, வழமைபோல அடுத்த வருட பிறப்பிற்கு முன் இனப்பிரச்சினைக்கு தீர்வு எண்டு இருபது வருஷமா விடுற அறிக்கைய திகதி மாத்தி கொடுத்திருக்கிறார்...!!!

## பள்ளிவாசல்களில் இனி 100 பேர் தொழ அனுமதி



சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டது

பள்ளிவாசல்களில் ஒரே தடவையில் 100 பேர் தொழுவதற்கான அனுமதியினை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் பள்ளிவாசல்களில் ஒரே தடவையில் 50 பேர்

06

11 அடிப்படைவாத அமைப்புகளுக்கு தடை

## அதிவிசேட வர்த்தமானி அரசினால் வெளியீடு



இலங்கையில் 11 இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளுக்கு தடை விதிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

06

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை

## கடற்றொழில் அமைச்சர் உரிய தீர்வு காண வேண்டும்



இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க

06





## 30 இலட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபா;

# 15 பில்லியன் ரூபா அரசினால் ஒதுக்கீடு

## புதுவருட காலத்தில் மக்களின் கஷ்டத்தை போக்கும் திட்டம்

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்தது முதல் பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் ஏற்பட்ட பின்னடைவு, மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பொருளாதார தாக்கம், பொருளாதார நெருக்கடி என பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பிரயத்தனம் மேற்கொள்ளும் நிலையிலே கொரோனா தொற்று எனும் உலகளாவிய பாதிப்பை எதிர்கொள்ள நேரிட்டது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி,கல்வி,சுகாதாரம் அன்றாட வாழ்க்கை என அனைத்திலும் தாக்கம் செலுத்திய இந்த வைரஸ் பாதிப்பு மரத்தால் விழுந்தவனை மாடு குத்தியது போன்ற நிலைமைக்கு தள்ளியது எனலாம்.

கொரோனா தாக்கம் மாத சம்பளம் பெறும் குடும்பங்களை விட அன்றாடம் உழைத்து காலத்தை ஓட்டும் குடும்பங்களையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களையும் அதிகமாக நெருக்கடிக்குள் தள்ளியது. பெரும் நெருக்கடி நிலையிலும் அந்த மக்கள் குறித்து சிந்தித்து அவரகளுக்கு உதவி வழங்க பொதுஜன பெரமுன அரசாங்கம் பல செயற்திட்டங்களை முன்னெடுத்தது. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வருமான வழியிழந்த தரப்பினருக்கும் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் அன்று ஆரம்பித்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் வழிகாட்டலுடன் இந்த செயற்பாடு இடம்பெற்றாலும் இதன் பின்னணியில் முன்னாள் அமைச்சரும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தலைவருமான பெசில் ராஜபக்ஷ இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வறுமை ஒழிப்பிற்காக பல்வேறு திட்டங்களை செயற்படுத்திய அவருக்கு வறிய மக்களின் இதயத் துடிப்பு நன்கு தெரியும். வறுமை கோட்டிற்குக் கீழ் இருந்து மக்களை மீட்டெடுக்கும் திட்டங்கள் ஒருபக்கம் இடம்பெறுகையில் மறுபக்கம் அவர்களுக்கான நிவாரண செயற்பாடுகள் அவரின் ஆலோசனையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலே சிங்கள தமிழ் புத்தாண்டை எப்படி கொண்டாடுவது என்று ஏக்கத்துடன் இருந்த வறிய குடும்பங்கள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியது. கடந்த வருடம் புத்தாண்டில் கொரோனா தாக்கத்தினால் வீடுகளில் முடங்கி இருக்க நேரிட்டது.ஆனால் இம்முறை நிலைமை ஓரளவு சீராகியுள்ள நிலையில் புத்தாண்டை கொண்டாடும் ஆர்வம் அனைவருக்கும் இருந்தது.பின்தங்கிய குடும்பங்களுக்கு எவ்வாறு உதவுவது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தலைவரான பெசில் ராஜபக்ஷ தலைமையிலான குழு சில வாரங்களுக்கு முன்னரே ஆராய்ந்தது. இதற்கு பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அவர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவொன்றை வழங்குவதே உகந்தது என இந்தக் குழு பரிந்துரை செய்தது.

வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில், இந்த சிறப்பு புத்தாண்டு கொடுப்பனவை ஏப்ரல் 11 தொடக்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, ரூ. 5,000 கொடுப்பனவைப் பெற தகுதியானவர்களை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை பிரதமர் அலுவலகம் வெளியிட்டது. நாட்டில் நிலவும் கொவிட்19 நோய்த்தொற்று நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையானது, நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்களுக்காக விடுக்கப்பட்டது.



அதற்கமைய, கொவிட்19 பரவலைத் தொடர்ந்து ரூபா 5,000 விநியோகிகப்பட்ட குடும்பங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த 10 பிரிவுகளைச் சேர்ந்தவர்களிலிருந்து 7 பிரிவினர் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய

1. சமுர்த்தி பெறுநர் குடும்பங்கள்
2. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள்
3. முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
4. ஊனமுற்றோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
5. சிறுநீரக நோய் காரணமான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
6. நூறு வயதை கடந்தவர்களுக்கான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
7. கோரிக்கை விண்ணப்பம் முன்வைத்து தகுதி பெற்ற குடும்பங்கள்

(மேலுள்ள 6 பிரிவுகளின் கீழுள்ள கோரிக்கை முன்வைத்து உதவி பெற தகுதியான குடும்பங்கள்)

அத்துடன் ஒரே குடும்பத்தில் இருவர் இதற்கான தகுதியை பெறும் நிலையில், அக்குடும்பத்திற்கு உச்சபட்சமாக ரூ. 5,000 மாத்திரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

குடும்பங்களிடையே காணப்படும உப குடும்பங்களுக்கும் குறித்த ரூ. 5,000 கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதோடு அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை பிரதேச செயலாளரினால் எடுக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

விசேட பண்டிகை கொடுப்பனவை பயனாளிகளுக்கு மிக விரைவாக விநியோகிக்கும் பொருட்டு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன், தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில், பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை ஈடுசெய்து, அவர்களது நாளாந்த வாழ்க்கையை சீராக்கும் வகையில் இக்கொடுப்பனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வழமை போன்று இந்த திட்டத்தையும் எதிரணி விமர்சித்து கேலி செய்திருந்தது.இது மக்களை ஏமாற்றும் வெற்று வாக்குறுதியாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் திட்டமிட்டவாறு 5000 ரூபா கொடுப்பனவு திட்டம் 11 ஆம் திகதி நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல் 12 ஆம் திகதி மாத்திரம் கொடுப்பனவாக 1.2 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது,

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சிரமங்களுக்கு தீர்வாக இந்த கொடுப்பனவு குறைந்த வருமானம் கொண்ட 3 மில்லியன் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பெசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைவாக 3 மில்லியன் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ரூ .5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க 15 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் ரூ .5 ஆயிரம் கொடுப்பனவை வழங்கியிருந்த நிலையில் இந்த திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலக மட்டங்களில் முறையான வழிகாட்டல்களுடன் கொடுப்பனவு பகிரப்பட்டது. வருமான வழிகள் யாவும் அடைபட்டிருந்த நிலையில் நப்பாசையுடன் இருந்த பல ஆயிரம் குடும்பங்கள் நிம்மதியாக சிங்கள, தமிழ் புத்தாண்டை கொண்டாட இந்த விசேட கொடுப்பனவு அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களில் மாத்திரம் தங்கியிருக்காது சொந்தக் காலில் எழுந்து நிற்கும் வகையில் பெசில் ராஜபக்ஷவின் தலைமையிலான செயலணி முன்னெடுக்க இருக்கும் காத்திரமான திட்டங்கள் எதிர்வரும் காலங்களில் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றும் என்று நம்பலாம்.

ஷம்ஸ் பாஹிம்...
















# නිරෝගිමත් අනාගතයක්

முருங்கை மரத்தின் பெறுமதி நாட்டிலுள்ள அனைவருக்கும்

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதார பெறுமதியை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்கான வாழ்க்கைக்கான தோட்டம் தேசிய வேலை திட்டத்தின் முதல் கட்டமாக ஒரு மில்லியன் முருங்கை மரக்கன்றுகளை நடும் பாரிய வேலை திட்டத்தின் முக்கிய நிகழ்வு கௌரவ விவசாய இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ, அவர்களின் தலைமையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமமக்களின் பங்களிப்புடன் மொனராகலை மாளிகாவில ராஜமக விகாரையில்

2021 ஏப்ரல் மாதம் 17ம் திகதி ஹிசதெல் கிராமத்தில் சுப நேரத்திற்கு அமைய நடைபெறும் உரிய திட்டத்திற்கு அமைவாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடான தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் 2500 சமய வழிபாட்டு தலங்களில் முருங்கை கன்றுகள் அன்றையதினம் இலவசமாக வழங்கப்படும்.
ஆரோக்கியமான எதிர்காலத்திற்காகவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் நாங்கள் முருங்கை கன்று நடுவோம்

### திட்டத்தின் நோக்கம்
கௌரவ விவசாய இராஜங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ

### திட்டத்தின் ஆலோசகர்
கௌரவ விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே

### திட்டத்தின் தலைமை
விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு.எல்.எல். அனில் விஜயஸ்ரீ

### திட்டத்தின் பங்காளர்கள்
விவசாய அமைச்சகம் | விவசாய இராஜாங்க அமைச்சகம்
கமநல அபிவிருத்தி திணைக்களம்

රජයේ වෛද්‍ය නිළධාරීන්ගේ සංගමයේ
අලුත් අවුරුදු දායකත්වය

AGRO-S

කෘෂිකර්ම රාජ්‍ය අමාත්‍යාංශය
கமத்தொழில் இராஜாங்க அமைச்சு
State Ministry of Agriculture

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
Department of Agrarian Development

MANUSATH DERANA

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 03ம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்ளக் காரணம் என்ன?

# சுகாதார வழிகாட்டுதல்களில் கூடுதல் கவனத்தின் தேவை

கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்திற்கு வந்துள்ள போதிலும் கூட அதன் பரவுதல் அச்சுறுத்தல் நீடித்த வண்ணமுள்ளன. கடந்த டிசம்பர் நடுப்பகுதி முதல் உலகின் பல நாடுகளும் அவசரத் தேவையின் நிமித்தம் இத்தடுப்பூசிகளைத் தம் பிரஜைகளுக்கு வழங்கி வருகின்றன. அவை பாவனைக்கு வந்து சுமார் நான்கு மாதங்களாகியுள்ள போதிலும் இத்தொற்றின் அச்சுறுத்தல் குறைந்தபாடில்லை.

இவ்வாறான நிலையில் இத்தடுப்பூசி பெற்றுக் கொள்கின்றவர்களில் ஒரு சிலருக்கு தீவிர பக்க விளைவுகள் ஏற்படுத்துவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அஸ்ட்ரா செனகா நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்துள்ள தடுப்பூசியை ஐரோப்பிய நாடுகளில் பெற்றுக்கொண்ட சிலருக்கு இரத்தம் உறைதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. அதனால் இத்தடுப்பூசிப் பாவனையை சில ஐரோப்பிய நாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதோடு சில நாடுகள் மீண்டும் அதனை வழங்கவும் ஆரம்பித்துள்ளன. இதேவேளை அமெரிக்க சுகாதாரத் துறை ஜொன்ஸன் ஜொன்ஸன் நிறுவனம் தயாரித்துள்ள தடுப்பூசியின் பாவனையை இடைநிறுத்துவதற்கு சிபாரிசு செய்துள்ளது.

இதன்படி இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசிகளும் சிலருக்கு தீவிர பாதிப்பை ஏற்படுத்தக்கூடியனவாக இருப்பது தெரிகின்றது.

ஆன போதிலும் பிரான்ஸ், இந்தியா, பங்களாதேசம் உள்ளிட்ட பல நாடுகளில் இத்தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவத் தொடங்கியுள்ளது. குறிப்பாக இத்தொற்றின் பரவுதலைக் கடும் முயற்சியின் ஊடாகக் கடந்த ஒக்டோபர் நவம்பராகும் போது இந்தியா பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வந்ததோடு ஜனவரி நடுப்பகுதி முதல் தடுப்பூசி வழங்கலும் ஆரம்பமாகின.

இந்நிலையில் இத்தொற்றின் பரவுதலை தவிர்த்துக் கொள்வதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் மக்கள் அசிரத்தை காட்டத் தொடங்கினர். இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்ததும் பாதுகாப்பு கிடைக்கப்பெற்று விட்டது என்ற நம்பிக்கை மக்களிடையே உருவாகியுள்ளதும் ஒரு காரணமாகியுள்ளது.

ஆனால் கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசிகள் இத்தொற்றின் தாக்கத்தின் தீவிரத் தன்மையையும் உயிராபத்து அச்சுறுத்தலையும் குறைக்குமே தவிர இத்தொற்றுக்கு உள்ளாவதைத் தடுக்காது. அதன் விளைவாகவே இத்தடுப்பூசிகள் பெற்றவர்கள் கூட மீண்டும் இத்தொற்றுக்கு உள்ளாகின்றனர்.

என்றாலும் இலங்கை முன்னெடுத்த பரந்துபட்ட கடும் முயற்சியின் பயனாக இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை தற்போது பெருவீழ்ச்சி நிலைக்கு வந்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீரவின் கூற்றுப்படி, 'உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென் கிழக்காசியப் பிராந்திய நாடுகளில் இலங்கையிலும் இந்தோனேசியாவிலும் மாத்திரமே கடந்த இரு வாரங்களாக இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மற்றப்படி ஏனைய எல்லா நாடுகளிலும் இத்தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவி வருகின்றது'.

அதனால் இலங்கை மக்களும் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்ளக்கூடாது. தற்போது நாட்டில் இத்தொற்று குறைவடைந்துள்ள போதிலும் அத்தொற்று முழுமையான கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை. அதனால் தொடந்தும் முன்னெச்சரிக்கையோடு சுகாதார வழிகாட்டல்களைக் பேணிக் கொள்ள வேண்டும்.

தற்போது சிங்கள, தமிழ் புத்தாண்டு காலமாக விளங்குகின்ற அதேநேரம், முஸ்லிம்களின் ரமழான் நோன்பு காலமும் ஆரம்பமாகியுள்ளன. குறிப்பாக புத்தாண்டு மற்றும் நோன்பு காலம் தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பேணி நடந்து கொள்ளத் தவறக்கூடாது. இத்தொற்று தவிர்ப்புக்கான பிரதான சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவற்றில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தற்போதைய சூழலில் பிரயாணங்களை தவிர்த்துக் கொள்வதே சிறந்தது என்பது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்தாகும். பிரயாணம் செல்ல நேருமாயின் பிரயாணம் நிறைவடையும் வரையும் முகக்கவசம் அணித்திருக்குமாறும் பயணம் நிறைவடைந்ததும் கைகளை நன்கு கழுவிக் கொள்ளுமாறும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான தடுப்பூசி புழக்கத்திற்கு வந்துள்ள போதிலும் இத்தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நீடித்து வருவதால் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான சுகாதார வழிகாட்டல்களை உரிய ஒழுங்கில் கடைபிடிப்பதே சிறந்த நிவாரணமாகும். இது விடயத்தில் அதிக கவனம் செலுத்துவது இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த மார்க்கமாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# ரமழான் நோன்பின் மகத்துவம்



இஸ்லாமிய மார்க்கத்தில் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கப்படுவது கட்டாயக் கடமையாகும். இறைவனின் கட்டளைக்கும் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களது வழிகாட்டல்களுக்கும் ஏற்ப இக்கடமையை நிறைவேற்றுவது அவசியம்.

இஸ்லாமிய வருடக் கணிப்பில் 09 வது மாதமாக விளங்கும் ரமழான் மாதம் தான் இக்கடமை நிறைவேற்றப்பட வேண்டும் என இறைவன் விதியாக்கியுள்ளான். இது இறையருள் நிறைந்த மாதமாகும். இம்மாதத்தின் இறுதிப் பத்திலுள்ள ஒற்றைப்படையான ஓர் இரவில் தான் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை மூலாதாரமாக விளங்கும் அல் குர்ஆன் இறக்கி அருளப்பட்டது.

அதனால் இம்மாதத்தைச் சிறப்பிக்கும் வகையிலும் மனிதனைப் புடம் போட்டு பக்குவப்படுத்துவதற்கு ஏற்பவும் இறைவன் இம்மாதத்தில் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபடுவதை முஸ்லிம்களுக்கு கடமையாக்கி இருக்கின்றான். அதற்கேற்ப ஒவ்வொரு முஸ்லிமும் காலை முதல் மாலை வரையும் உணவு, பானங்களைத் தவிர்த்து உடல், உள இச்சைகளைக் கட்டுப்படுத்தி நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடுபடுகின்றனர். இதன் ஊடாக ஒவ்வொருவரும் தம்மைப் புடம்போட்டு தூய்மைப்படுத்தி மனித சமுதாயத்துக்குப் பல்வேறு நன்மைகளை அளிக்கின்றனர்.

## நோன்பின் சிறப்புகள்

அந்த வகையில் இறைவன் தன் அருள் மறையில் 'ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள்மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சத்தை அடைந்து கொள்ளலாம். **(அல் குர்ஆன் 2:183)** என்று குறிப்பிட்டிருக்கின்றான். நோன்பானது தனியே முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது சமுதாயத்தினருக்கும் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு கடமையாக்கப்பட்டிருக்கும் கடமை அல்ல. அதற்கு முன்னரான சமுதாயங்களுக்கும் நோன்பு கடமையாக இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

நோன்பானது இறையச்சத்தையும் இறை நினைவையும் பெற்றுத்தரக்கூடியதாகும். அது மனிதனை இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ப புடம்போட்டு பக்குவப்படுத்துவதற்கு இன்றியமையாத ஒன்றாகும். அவ்வாறு மகத்துவம் மிக்க இறையச்சத்தை அடைந்து கொள்வது நோன்பின் முக்கிய இலக்காகும்.

அதனால், 'நோன்பு நோற்பவன் தன் உணவையும், குடிபானத்தையும், இச்சையையும் எனக்காகவே விட்டுவிடுகிறான். நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுக்கின்றேன். ஒரு நன்மைக்குப் பத்து மடங்கு நன்மைகளை வழங்குவேன்' என்று அல்லாஹ் கூறியதாக முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)**. இது நோன்பு எவ்வளவு சிறப்புக்குரியது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அதேநேரம் 'என் உயிர் எவனிடம் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக நோன்பாளியின் வாயிலிருந்து வெளியாகும் வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட மிகவும் நறுமணமுள்ளதாகும்' என்றும் அன்னார் கூறினார்கள். **(ஆதாரம்: புகாரி)**

ரமழான் நோன்பு ஆரம்பமானதும் நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டுவிடும். ஷைத்தான்கள் விலங்கிடப்பட்டு விடும். சுவார்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு விடும்.

சுவர்க்கத்தின் வாசல்களில் ஒன்று 'அர்ரய்யான்' என்ற பெயரைக் கொண்டுள்ளது. மறுமை நாளில் நோன்பாளிகளைத் தவிர வேறு யாரும் அவ்வாசல் ஊடாக நுழைய மாட்டார்கள். 'நோன்பாளிகள் எங்கே' என்று மறுமையில் அழைக்கப்படும். அப்போது நோன்பாளிகள் எழுந்து அவ்வாசல் வழியாக சுவர்க்கத்தில் நுழைவார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் மூடப்படும். அவர்களைத் தவிர வேறு யாரும் அவ்வாசலில் நுழையமாட்டார்கள்' எனவும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம்: புகாரி)**

இவ்வாறு பலவிதமான சிறப்புக்களையும் மகத்துவங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது ரமழான் நோன்பு.

## நோன்பு மூலம் தன்னடக்கம்

உடல் இச்சைகள், பாலியல் உணர்வுகள் மனிதர்களுக்கு இயற்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அது முறையற்று பயன்படுத்தப்படுமானால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். பெற்ற பிள்ளைகள், வளர்த்த பெற்றோர் என்று யாரையும் பார்க்காது. கொலை செய்யும் அளவுக்குகூட துணிந்துவிடும். அவ்வாறான நிலைகளிலிருந்து மனிதனை நெறிப்படுத்தி பக்குவப்படுத்த நோன்பு பெரும் பங்களிக்கக்கூடியதாக உள்ளது. இதன் விளைவாக சொந்த மனைவியிடம் கூட நெருங்காத தன்னடக்கத்தைக் கற்றுக்கொடுக்கிறது நோன்பு.

## கோபத்தை அடக்குதல்

உலகம் இயந்திரமயமடைந்துள்ளது. மனிதர்களுக்குச் சிந்திக்கும் தன்மை குறைந்துகொண்டே போய் சுயநலம் பெருகி சகிப்புத்தன்மை குறைவடைந்து செல்கிறது. இதன் விளைவாக மோசமான செயல்களில் ஈடுபடக்கூடியளவுக்கு மனிதன் செல்லக் கூடியவனாகின்றான். அவ்வாறான நிலைமையிலிருந்து மனிதனை மீட்டு, அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வை வளர்த்தெடுக்கவும் கோபத்தை விடுத்து சகிப்புத்தன்மை, பொறுமை போன்ற உயர் பண்புகள் மேலோங்கவும் இஸ்லாம் நோன்பின் ஊடாக வழிவகுத்திருக்கின்றது.

## நாவடக்கம்

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் 'நோன்பு ஒரு கேடயமாகும். தவறான பேச்சுக்களைப் பேச வேண்டாம். யாராவது உம்மிடம் சண்டைக்கு வந்தால் நான் நோன்பாளி' என்று அவரிடம் கூறிவிடவும்' என்று கூறியுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)** இதன் ஊடாக நாவடக்கத்தைக் கற்றுத்தந்து நன்மைகளை ஊக்குவிக்கின்றது இஸ்லாம்.

## உணவுக் கட்டுப்பாடு

பொதுவாகத் தவறான உணவு பழக்கவக்கம் மற்றும் நடத்தைகளால் உடலில் கொழுப்பு மற்றும் குளுக்கோஸின் அளவு அதிகரித்துக் காணப்படும். அவை தொடர்பான நோய்களிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்க மருத்துவ உலகம் போராடிக் கொண்டிருக்கிறது. என்றாலும் நோன்பு இவ்வாறான பாதிப்புக்களில் இருந்தும் மனிதனுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கக்கூடியதாக விளங்குகின்றது.இதனை மருத்துவ உலகும் ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கு அமெரிக்க மருத்துவர் யூவேயின் கூற்று நல்ல உதாரணமாகும். 'நோயாளி சாப்பிட வேண்டாம். பசித்திருப்பது அவருக்குச் சிறந்தது' என்று அவர் ஒரு தடவை குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேநேரம் நுரையீரல் சிறப்பாக இயங்கக்கூடிய நேரமான அதிகாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை 'ஸஹர்' செய்வதன் மூலம் நுரையீரல் புத்துணர்ச்சி பெறுகிறது. இதனால் மற்ற உறுப்புகளும் நன்கு செயற்படத் தொடங்குகின்றன.

## சமூக நலம் பேணுதல்

மேலும் நோன்பின் மூலம் ஏழை, எளிய மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கப் பெறுகின்றது. அதன் ஊடாக ஏழைகளுக்கும் வறுமைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும் அநாதைகளுக்கும் தேவையுடையவர்களுக்கும் தேடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதற்கான மனிதாபிமானம் மேலோங்குகின்றது. அத்தோடு கருணை மற்றும் இரக்கப் பண்புகளும் மேம்பாடு அடையவும் வழிவகுக்கின்றது ரமழான் நோன்பு. அத்தோடு மனிதனின் ஆன்மீக மேம்பாட்டுக்கும் ஈருலகின் விமோசனத்திற்கும் சிறந்த பயிற்சிக் களமாகவும் விளங்குகின்றது நோன்பு.

ஆகவே தனிமனித, குடும்ப மற்றும் சமூக நலன்களின் மேம்பாடுகளுக்கு ஏற்ப மனிதனைப் புடம்போட்டு பக்குவப்படுத்தும் ரமழான் நோன்பை ஈருலகிலும் சுபீட்சம் விமோசனம் அடையக்கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்வோம்.

# ஆளுமைகள் நிறைந்த ஊடகவியலாளர் மர்ஹூம் எப்.எம்.பைரூஸ்



எப்.எம்.பைரூஸ் என்ற பெயர் ஊடகத்துறையில் இலகுவில் மறக்க முடியாத ஒரு பெயராகும்.

1965 முதல் 2019 வரை ஊடாக இலக்கியத் துறையில் பணிபுரிந்த அல்ஹாஜ் எப். எம். பைரூஸ் இவ்வுலகை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகளாகின்றன. 1952 பெப்ரவரி 21 இல் கொழும்பில் பிறந்த இவர், சிறிது காலம் நோயுற்றிருந்த நிலையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி காலமானார்.

தினபதி, சிந்தாமணி, தினகரன் பத்திரிகைகளில் பணி புரிந்த இவர், மும்மொழி ஆற்றல்மிக்க ஒருவராகத் திகழ்ந்தார்.

முகம்மது காஸிம் சித்தி பரீதா தம்பதியருக்குப் பிறந்த இவர், கொழும்பு அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் பயின்றதோடு, பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவராவார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் உள்ள பொது வசதிகள் சபையில் ஆளணி உதவியாளர், சிரேஷ்ட முகாமையாளராகப் பணிபுரிந்த வேளை ஊடகத் துறையிலும் ஈடுபட்டார். ஆரம்பத்தில் தினபதியில் பணிபுரிந்த இவர், தினபதி இஸ்லாமிய பூங்காவை நடாத்தினார். தினபதி மூடப்பட்ட பின் தினகரனில் இணைந்த இவர், இறக்கும் வரை தினகரனில் பத்திரிகையாளராகப் பணிபுரிந்தார்.

பத்திரிகைத் துறையில் மிக விரைவாகச் செய்திகளை வழங்கும் ஒரு பத்திரிகையாளராக மர்ஹூம் பைரூஸ் பெயர் பெற்றிருந்தார். செய்திகளைத் தேடிப் பெறுவதில் வல்லவராக இவர் திகழ்ந்தார். இதற்காக முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் இவருக்கு 'பராண்டி' என்ற பட்டப் பெயரைச் சூட்டி இருந்தார். செய்திகளைத்

துருவித்துருவி தேடிப் பெறும் திறமை இவருக்கு இருந்தது. எப்போதும் செய்தியை முறையாக எழுதுவதில் இவருக்கு இருந்த திறமை காரணமாக இவரது செய்தியை செம்மைப்படுத்த வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஒரு பஸ் டிக்கட்டில் கூட குறிப்புகளை எழுதி, செய்திகளை அறிக்கையிடும் வல்லமை மிக்கவராக பைரூஸ் திகழ்ந்தார். இவருக்கு இருந்த மும்மொழி ஆற்றலும் இதற்கு க் காரணமாகும். தினபதி, சிந்தாமணிக்கு மட்டுமன்றி, 'தவச வீகன்ட்' பத்திரிகைகளுக்கும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார். இது தவிர, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு செய்தியாளராகவும் பல வருடங்கள் இவர் பணிபுரிந்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் சவூதி அரேபிய அரசுக்கு விடுத்த கோரிக்கைப்படி ரியாத் இப்னு சவூதி பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை கற்கை நெறியை மேற்கொள்வதற்கு அப்போதைய ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் தெரிவு செய்யப்பட்ட 10 ஊடகவியலாளர்களில் இவரும் ஒருவராவார். இதன்படி ரியாத் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். 03 முறை புனித ஹஜ் கடமையையும் நிறைவேற்றியுள்ளார்.

மர்ஹூம் பைரூஸ் விசேடமாக நாட்டுக்காக பங்களிப்புச் செய்த சிங்கள தமிழ் முஸ்லிம் தலைவர்களைப் பற்றி நினைவுக் கட்டுரைகளை வெளியிடுவதில் விஷேடமாக கவனம் செலுத்தினார். அவ்வாறான தலைவர்கள் மற்றும் சிறப்புக்குரிய வர்கள் பற்றிஅவர்களது நினைவு தினங்களில் கட்டுரைகளை வெளியிட்டு வந்தார்.

மர்ஹூம் பைரூஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக அங்கத்தவராக இருந்ததோடு, அதன் செயலாளர், தேசிய அமைப்பாளர், உப தலைவர் பதவிகளை வகித்து ஊடகத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்திய ஊடகப் பயிற்சி கருத்தரங்குகளில் வளவாளராகப் பணிபுரிந்து இளைய தலைமுறைக்கு ஊடகக் கல்வியை போதிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்.

பத்திரிகைத் துறைக்கு மேலதிகமாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் 'சுட்டும் சுடர், உலக வலம், தீன் பயிர் வளர்க்கும் மத்ரஸாக்கள்' உட்பட பல பேட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி வானொலித் துறையிலும் பங்களிப்புச் செய்தார்.

சபாநாயகர்களான எம்.எச். முஹம்மத், எம்.ஏ. பாக்கீர் மாக்கார் ஆகியோருடன் நெருங்கிச் செய்யப்பட்ட இவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்துள்ளார். மர்ஹூம் பாக்கீர் மாக்கார் நாட்டின் சபாநாயகராக இருக்கும் போது நூற்றுக்கணக்கான முஸ்லிம் கிராமங்களுக்கு விஜயம் செய்த போது அவருடன் இணைந்து பயணித்து அது தொடர்பான செய்திகளை ஊடகங்களில் அறிக்கையிட்டார். அதே போன்று மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சராக இருக்கும்போது அவருடன் நெருங்கிச் செய்யப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் அஸ்வரின் பணிகளை, எண்ணக்கருக்களை எழுத்துருவப்படுத்தியவர்களில் கலைவாதி கலீலுடன் இணைந்து பைரூஸும் செயற்பட்டார். முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சு அக்காலத்தில் வருடாவருடம் நடாத்திய தேசிய மீலாத் விழாக்களின்போது வெளியிடப்பட்ட வெளியீடுகளில் இவர்களது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் அஸ்வர் அறிமுகப்படுத்திய 'வாழ்வோரை வாழ்த்துவோம்' திட்டத்தின் கீழ் 1993இல் இவரது ஊடகப் பணிக்கு 'சவுதுல் ஹக்' (சத்தியத்தின் குரல்) என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1965 இலக்கியத்துறையில் பிரவேசித்த இவர், காயல்பட்டிணத்திலும் கீழக்கரையிலும் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் தினபதியின் பிரதிநிதியாகக் கடமையாற்றினார். கீழக்கரை மாநாட்டில் முஸ்லிம் பத்திரிகையாளர் என்ற வகையில் இவர் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டார்.

இவர் பைரூஸியா என்ற புனைப் பெயரிலும் ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானான இவர், மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் ஆலோசனைக் குழு உறுப்பினராகப் பணிபுரிந்த இவர், இலங்கை போக்குவரத்து சபை ஆலோசனை குழு உறுப்பினராகவும் கலாசார அமைச்சின் இஸ்லாமிய நுண்குழுவின் அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார்.

கல்முனையில் புகழுக்குரிய மூத்த தம்பி ஆலிம் குடும்பத்தில், பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் மனைவியின் சகோதரியான ஆயிஷாவை திருமணம் முடித்தார். இவர்களுக்கு பாத்திமா பர்ஹா, முஹம்மது பைஸால் என்ற இரு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஆளுமைகள் நிறைந்த அமைதியான போக்குமிக்க பைரூஸ் நேர்மைக்கு அடையாளமாகத் திகழ்ந்தார். பத்திரிகைத் துறைக்கு மேலதிகமாக விளம்பர முகவர் நிறுவனம் ஒன்றையும் நடத்தினார். விளம்பரத்தைக் கொடுக்கும் எவருக்கும் அதற்குரிய கொமிஷனை சரியாக சதம் கணக்கில் பகிந்தளிப்பது பைரூஸிடம் காணப்பட்ட சிறப்பம்சமாகும்.

67 வருடங்கள் வாழ்ந்து மறைந்த பைரூஸ் ஹாஜி, நேர்மைக்கு, கடின உழைப்புக்கு முன்மாதிரிமிக்கவராக இருந்ததோடு, பழகுபவர்களுக்கு இனிமையானவராகவும் இருந்தார்.

இப்புனித ரமலானில் அவரது மறுமைக்காக பிரார்த்திப்போம்.

**என்.எம்.அமீன்...**

# பறவைகளின் விசித்திரம் மிகுந்த வாழ்க்கை கோலம்



**பறவைகள் பல வகைப்படும். அவற்றில் மிகச் சிறியவை முதல் பெரியவை வரை உள்ளன. பறவைக்குப் பறவை பறக்கும் ஒழுங்கு, நடத்தை, உணவு, இனப்பெருக்க செயற்பாடு, கூடு அமைக்கும் ஒழுங்கு உள்ளிட்ட அனைத்தும் வேறுபட்டுள்ளன. குறிப்பாக கிளி, மைனா போன்ற சில பறவைகள் வேகமாக சிறகடித்து பறக்கின்ற அதேநேரம் காகம், உண்ணிக்கொக்கு போன்ற சில பறவைகள் நடுத்தர அளவில் சிறகடித்து பறக்கக் கூடியதாக இருக்கின்றன.**

அதேவேளை செம்பருந்து, பெலிகண் போன்ற ஒரு சில பறவைகள் ஆகாயத்தில் அதிக உயரத்தில் சிறகடிக்காது வட்டமிட்டபடி பறக்க, இன்னும் சில பறவைகள் நில மட்டத்திலிருந்து சில மீற்றர்கள் உயரத்தில் பறக்கக் கூடியனவாகவும் உள்ளன. அவற்றில் நீரில் மனிதன் நீந்துவது போன்று உந்திப் பறக்கும் பறவைகளும் காணப்படுகின்றன.

அதேநேரம் எல்லாப் பறவைகளும் இயற்கையாகவே இரண்டு கால்களைப் பெற்றுள்ளன. அவற்றில் ஒரு சில பறவைகள் ஒற்றைக்காலில் நின்ற நிலையில் நீண்ட நேரம் காத்திருந்து இரை தேடும். ஆனால் ஊர்க்குருவி அல்லது குந்துகாலி என்கிற பறவை ஏக காலத்தில் இரு கால்களையும் பதித்து துள்ளித் துள்ளியபடி நடமாடும். பொதுவாக இரண்டு கால்களைப் பெற்றுள்ள உயிரினங்களில் பெரும்பாலானவை அவ்வாறு நடமாடுவதில்லை. அந்த அடிப்படையில் நடமாடுவது என்பது இலகுவான காரியமுமல்ல. அப்படியிருந்தும் அதுதான் ஊர்க்குருவியின் இயல்பாக உள்ளது.

## மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம்

பெரும்பாலான பறவைகள் காலை முதல் மாலை வரையும் இரை தேடும். ஆந்தை உள்ளிட்ட ஒரு சில பறவைகள் இரவில் இரை தேடக் கூடியனவாகக் காணப்படுகின்றன. ஆனாலும் எந்தவொரு பறவையும் தாம் தேடுகின்ற இரையை நாளைக்கென சேமித்து வைப்பவை அல்ல. அத்தோடு அளவுக்கு அதிகமாக உணவு கிடைத்து விட்டதென்பதற்காக அவற்றை அதிகளவில் உண்பவையுமல்ல. மாறாக நாளாந்த உணவுத் தேவையை அவை அன்றன்றே நிறைவேற்றிக் கொள்கின்றன.

இதேவேளை, குளிர்வலய நாடுகளில் வருடத்தில் சில மாதங்கள் அதிக பனிப்பொழிவு காணப்படும். அக்காலப் பகுதியில் அந்நாடுகளில் உள்ள பெரும்பாலான பறவைகள் அன்றாட உணவுத் தேவைக்காக இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல வெப்ப வலய நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் உணவுக்காகப் புலம்பெயர்வது வழக்கம். இதன் நிமித்தம் ஆயிரக்கணக்கான மைல்கள் அவை பயணிக்கின்றன.

பெரும்பாலும் ஒகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் காலப் பகுதியில் இவ்வாறு புலம்பெயரும் இப்பறவைகள் மார்ச், ஏப்ரல் வரை புலம்பெயரும் பிரதேசங்களில் தங்கி இருக்கும். குளிர்க்கால நிலை முடிவுற்றதும் அவை தம் வாழிடங்களுக்கு சரியாக திரும்பி விடும்' என்கிறார் தமிழகத்தின் 'காக்கைக் கூடு' சுற்றுச்சூழல் அமைப்பின் ஸ்தாபகரான பறவையியல் ஆர்வலர் செழியன் ஜா.

குளிர்வலய நாடுகளிலுள்ள பறவைகளின் இச்செயற்பாடானது நேற்று, இன்று ஆரம்பமானது அல்ல. அவை காலாகாலமாக இடம் பெற்று வரக் கூடியன. அதனால் மனிதன் தொழில் உள்ளிட்ட பல்வேறு தேவைகளின் நிமித்தம் புலம் பெயரும் பழக்கத்தைப் பறவைகளிடம் கற்றிருப்பானோ என எண்ணத் தோன்றுகின்றது.

இவை இவ்வாறிருக்க சேலம் பறவையியல் கழகத்தின் ஒருங்கிணைப்பாளரான அன்ஜலின் மனோ, தூக்கணாங்குருவி, கழுகு உள்ளிட்ட பெரும்பாலான பறவைகள் கூடமைத்தல், குஞ்சுகளைப் பராமரித்தல், இரை தேடல், குஞ்சுகளுக்கு உணவூட்டல் போன்ற பொறுப்புகளை ஆண்ணும் பெண்ணும் கூட்டாகப் பகிர்ந்து கொள்ளும் பண்பைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

'வாழிடத்திற்கான கூட்டை அமைத்துக் கொள்ளாது பெரும்பாலான பறவைகள் இனப்பெருக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை' என்கிறார் சூழலில் எழுத்தாளர் கோவை சதாசிவம்.

சேலம் பறவையியல் கழகம் அண்மையில் ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் விஷேட வளவாளராகக் கலந்து கொண்ட பறவையியல் ஆர்வலர் தாரணி வெங்கடாச்சலம், 'Scaly Brested Munia என்கிற பறவை கூடு கட்டுவதும், அதற்கான மூலப்பொருட்களை சேரிப்பதும் அவற்றைக் கூடு கட்டும் இடத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும் ஒழுங்கும் மிகுந்த ஆச்சரியம் மிக்கவை.

குறிப்பாக கூடு கட்டுவதற்கான மூலப் பொருட்களை முதல் தடவை ஒரு வழியால் கொண்டு வந்து சேர்த்தால் இரண்டாவது தடவை வேறொரு வழி ஊடாகவே அவை கொண்டு வந்து சேர்க்கும். அதாவது தாம் கூடு கட்டும் இடத்தை வேறு எந்தவொரு உயிரினமும் கண்டு விடக் கூடாது என்பதில் அவை கவனம் செலுத்தி செயற்படுவதோடு, தம் முட்டைகளையும் குஞ்சுகளையும் தம் நேரடிக் கண்காணிப்பிலேயே அவை வைத்திருக்கும்' என்று குறிப்பிடுகின்றார்.





## பறவைகளின் நடத்தைகளை அவதானிப்பது மனஅழுத்தத்தை பெருமளவில் தணிக்குமென்பது ஆய்வாளர்களின் நம்பிக்கை

அதேநேரம் தம் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் ஏனைய உயிரினங்களால் ஆபத்துகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படும் பெருபாலான பறவைகள் பலவித உத்திகளையும் அதன் நிமித்தம் பயன்படுத்துகின்றன.

குறிப்பாக தூக்கணாங்குருவி மின்மினி பூச்சிகளை கூட்டினுள் வைத்திருக்கும். கழுகு போன்ற பறவைகள் செங்குத்தான பாறை இடுக்குகளில் கூடமைக்கும். இன்னும் சில பறவைகள் தேன் கூட்டுக்கு அருகில் கூடமைக்கும். ஆந்தையின் மலம் இயல்பாகவே அதிக துர்நாற்றம் மிக்கது. இருந்தும் தம் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் ஏனைய உயிரினங்களால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தலைத் தவிர்க்கும் வகையில் தம் மலத்தைக் கொண்டு பொந்துக்குள் கூடமைத்து முட்டையிட்டு குஞ்சு பொரிக்கக் கூடியதாக இருக்கிறது ஆந்தை.

இவ்வாறு பல்வேறு விதமான நுணுக்கங்களையும் உத்திகளையும் தம் வாழ்வில் பறவைகள் பயன்படுத்துகின்றன. அவற்றில் மனித வாழ்வுக்கும் பயன்படக் கூடிய உத்திகளும் நுணுக்கங்களும் காணப்படுகின்றன.

மேலும் பறவைகள் மனிதனுக்கு பலவழிகளில் உதவுகின்றன. குறிப்பாக பறவைகளின் நடமாட்டம் காணப்படும் பிரதேசங்களில்தான் மனிதனால் வாழ முடியும் என்பது தான் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்தாகும். அதாவது மனித வாழ்வுக்கு பொருத்தமற்ற இடங்களில் பறவைகளின் நடமாட்டத்தை அவதானிக்க முடியாது. ஏதாவதொரு பிரதேசத்தில் பறவைகளின் நடமாட்டம் காணப்படவில்லையாயின் அப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலில் ஏதோ பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது என்று தான் அர்த்தம்.

அந்த வகையில் மனித வாழ்வுக்கு பொருத்தமான இடத்தை அடையாளப்படும் ஊடகமாகப் பறவைகள் விளங்குகின்றன. கழுகு போன்ற ஊண் உண்ணும் பறவைகள் சுற்றுச்சூழலில் காணப்படும் மாமிசக் கழிவுகளை உணவாகக் கொண்டு சுற்றுச்சுழலை சுத்தப்படுத்தும். அவற்றில் காகமும் அடங்கும். இதன் பயனாக சுற்றாடலில் நோய்க் கிருமிகள் பரவுவது கட்டுப்படும்.

சிட்டுக் குருவி, மைனா போன்ற சில பறவைகள் விவசாயத்திற்கு கெடுதல் விளைவிக்கும் பூச்சி புழுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடியனவாக உள்ளன. ஆந்தை எலிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முக்கிய உயிரியாகும். இதனால் பல பறவைகள் விவசாயிகளின் தோழனாக விளங்குகின்றன. அத்தோடு மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பணியையும் அவை மேற்கொள்கின்றன.

அத்தோடு மரம், செடி,கொடிகள் போன்ற தாவரங்களின் விருத்திக்கும் பரவுதலுக்கும் கூட பறவைகள் முக்கிய பங்களிக்கின்றன. உலகில் 528 தாவரங்களின் மகரந்த சேர்க்கைக்கு வௌவால் மாத்திரம் பங்களிப்பதோடு தாவரங்களின் பரவுதலுக்கும் உதவுவனவாகவும் உள்ளது.பறவைகள் உணவாகக் கொண்டு எச்சத்துடன் வெளியேற்றும் வித்துகள் நன்கு செழித்து வளரும் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் பறவைகளின் எச்சம் விவசாயத்திற்கும் குறிப்பாக விளைச்சலின் அதிகரிப்புக்கும் பெரிதும் உதவக் கூடிய சிறந்த பசளையாகும். இது தொடர்பில் சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம் குறிப்பிடுகையில், ராஜஸ்தானில் ஒரு விவசாயி ஒரு மூடை கோதுமையைப் பறவைகளுக்கு உணவாக வழங்கி இரண்டரை மாதத்தில் 100 மூடைகள் கோதுமையைப் பெற்றுக் கொண்டார். அந்தளவுக்கு அப்பறவைகளின் எச்சம் கோதுமைக்கு பசளையானது என்றார்.

இதேவேளை உலகிற்கு பெரும் சவாலாகியுள்ள கொரோனா காராணமாக ஊரடங்கு, தனிமைப்படுத்தல், முடக்கம் என்பன தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் அடிக்கடி பார்த்து கேட்டு நிறைய பேர் மனஅழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பிரான்ஸில் கூட சுமார் 12 வீதத்திற்கும் மேற்பட்டோர் மனஅழுத்தத்திற்காக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனால் 'பறவை நோக்குதல் மூலம் மனஅழுத்த பிரச்சினையைத் தவிர்த்துக்கொள்ள முடிவதோடு உடலுக்கு தேவையான விட்டமின் டி யையும் பெற்றுக் கொள்ளலாம்' என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சம்பத் செனவிரட்ன.

அத்தோடு தொலைக்காட்சி, கையடக்க தொலைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையாகியுள்ள பிள்ளைகளை அவற்றிலிருந்து வெளியே கொண்டு வரவும் பறவை நோக்குதல் உதவும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மனிதனுக்கு பலவழிகளிலும் பயனளிக்கும் பறவைகளில் மனிதனுக்கு பயனளிக்கக் கூடியதும் அவன் கற்றுக் கொள்ளக் கூடியதுமான பல விடயங்களும் இருக்கவே செய்கின்றன. அவற்றில் எந்நாளும் நீராடுதலும் இருப்பதை அல்லது கிடைப்பதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் தன்மையும் பிரதானமானவை.

மனிதனைப் போன்று சேமித்து வைக்கும் பண்போ நிபந்தனைகள் விதித்து போராடும் பண்போ பறவைகளிடம் கிடையாது. அவற்றின் நடமாட்டத்திற்கும், உணவு தேடலுக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் எவ்வளவுதான் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற போதிலும், அவற்றைப் பொறுத்துக் கொண்டு மனித நடமாட்டப் பிரதேசங்களில் நடமாடுவதிலும் வாழ்வதிலும் அவை விடாமுயற்சியோடு செயற்படுகின்றன. அதனால் அவற்றின் இருப்பையும் நடமாட்டத்தையும் பாதுகாப்பது இன்றியமையாததாகும்.





**மர்லின் மரிக்கார்...✍**

# கலைகளின் ஊடாக இனநல்லுறவை கட்டியெழுப்புவோம்!

**கிழக்கு மாகாணத்தில் வெகு விரைவில் குறும்படத் திருவிழா ஒன்று நடத்தப்படவிருக்கிறது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதனை ஏற்பாடு செய்திருப்பதாக திணைக்களப் பணிப்பாளர் சரா.நவநீதன் தெரிவித்தார்.**

அதற்கான முன்னோடி நடவடிக்கையாக மாவட்டம் தோறும் குறும்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு நாள் பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் முதலாவது பயிலரங்கு காரைதீவு விபுலாநந்த கலாசார மண்டபத்தில் இரு தினங்களில் பணிப்பாளர் சரா.நவநீதன் தலைமையில் நடைபெற்றது.

மாகாணப் பணிப்பாளர் தலைமையில் ஆரம்பமான இப்பட்டறை அங்குரார்ப்பண விழாவிற்கு பிரதமஅதிதியாக காரைதீவு பிரதேச செலாளர் சிவ.ஜெகராஜனும், கௌரவ அதிதியாக தவிசாளர் கி.ஜெயசிறிலும் கலந்து சிறப்பித்தனர்.

பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் பட்டறையின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார்.வளவாளர் ஞானதாஸ் முதலாவது விரிவுரை நிகழ்த்தினார்.

வளவாளர்களாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பொறியியலாளர் கௌரிபாலன், பிரபலஎழுத்தாளர் உமா வரதராஜன், தென்இந்திய சினிமா தயாரிப்பாளர் வெற்றிமாறனின் உதவி தயாரிப்பாளர் 'ஆடுகளம்' திரைப்பட புகழ் ஹஸீன், குறும்பட தயாரிப்பாளர் ஜானதாஸ் காசிநாதர், ஆறாம்நிலம் படத் தயாரிப்பாளர் ஈழத்தின் முக்கிய திரைக்கலைஞர் ஆனந்த ரமணண் ஆகியோர் கலந்து பட்டறையை வளப்படுத்தினர்.

இரண்டாம்நாள் விழாவில் பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார். அவர் அங்கு உரையாற்றிய போது "இந்தியாவில் 132கோடிக்கு மேல் பல்லின, பல் மொழி, பல் கலாசார இனக் குழுமங்களிருந்தும் அந்த நாடு ஒற்றுமையாக இருப்பதற்குக் காரணம் கலைகள். அந்தக் கலைகள் தான் அவர்களை ஒன்றாக கட்டிப் போட்டிருக்கின்றன. அதே போல இலங்கையிலுள்ள இனமத முரண்பாடுகளை கலைகளைக் கொண்டு தான் களைய வேண்டும்.

கலைகள் மக்களை கட்டிப் போடக் கூடியன. ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடியன. இல்லாவிட்டால் 132கோடி மக்களுடைய இந்தியா இன்று 1000 துண்டுகளாகப் பிரிந்திருக்கும். எனவே நாமும் இந்த சின்னஞ் சிறிய அழகிய நாட்டில் ஒற்றுமையாக சமாதானமாக வாழ வேண்டுமெனின் இத்தகைய கலைப் பயணத்தைத் தொடர வேண்டும். கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பணிப்பாளர் நவநீதன் வந்த பின்னர்தான் இன்று களைகட்டி வருகிறது.அவரையும் குழாத்தினரையும் பாராட்டுகிறேன்" என்றான்.

"இன்று அவசரமான உலகம். கிரிக்கட் கூட 20 க்கு 20 தொடரை மறந்து 1மணி நேரத்துள் எப்படி போட்டியை நடாத்தலாம் என்பதை யிட்டு சிந்தித்து வருகிறார்கள். மக்களுக்கு நேரமில்லை. எனவே 3 மணி நேரம் இருந்து படம் பார்த்த காலம் மலையேறி விட்டது. இப்படியான குறுந்திரைப்படங்கள்தான் எதிர் காலத்தில் களைகட்டும். எனவே இப்படியான பயிற்சி பெறுபவர்கள் சர்வதேச தரம் வாய்ந்த குறும்படங்களைத் தயாரிக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வின் இறுதியில் சான்றிதழ்கள் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டன . பயிற்சிப் பட்டறையை மாகாண கலாசார உத்தியோகத்தர் குணபாலா விஜயரெத்தினம் நெறிப்படுத்த காரைதீவு கலாசார உத்தியோகத்தர் மு.சதாகரன் நன்றியுரை நிகழ்த்தினார்.







**கிழக்கில் விரைவில் குறும்பட திருவிழா**

**வி.ரி.சகாதேவராஜா...✍**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

## ஆட்கடத்தல், குற்றச்செயல்களை கட்டுப்படுத்தல்;

# இலங்கையுடன் ஒன்றிணைந்த பல்வேறு செயற்பாடுகளில் அவுஸ்திரேலியா

நாடுகளுக்கிடையில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதில் ஒன்றிணைந்த செயற்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களின் உறுதிப்பாடுகளை அவுஸ்திரேலியா மிகவும் மதிக்கின்றது என ஒன்றிணைந்த செயற்குழு படையணியின் கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் மார்க் ஹில் தெரிவித்தார்.

2021 ஏப்ரல் 08 ஆம் திகதி இணைய வழியக இடம்பெற்ற வைபவத்தில் ஒன்றிணைந்த பாதுகாப்பு செயற்குழுவின் கட்டளை அதிகாரி மற்றும் அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து, குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாக இலங்கை பொலிஸுக்கு 5 வான் பரப்பு கண்காணிப்பு ட்ரோன்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான ஒன்றிணைந்த செயற்குழுப் படையணியானது, ட்ரோன் மூலம் வான் பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வசதிகளுக்கான ஒத்துழைப்பை இலங்கையின் பொலிசாருக்கு பெற்றுக்கொடுத்துள்ளது.



இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் நிவாரணப் பணிகள், நாடுகளுக்கு இடையிலான எல்லைகளில் ஏற்படும் குற்றச் செயல்களைத் தடுத்தல் மற்றும் கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் என்பனவற்றைத் தடுக்க இந்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஒன்றிணைந்த செயற்குழு படையணியின் கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் மார்க் ஹில்,

'நாடுகளுக்கிடையில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதில் ஒன்றிணைந்த செயற்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களின் உறுதிப்பாடுகளை அவுஸ்திரேலியா மிகவும் மதிக்கின்றது' என்று கூறினார். 'இந்தத் தருணத்தில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்துவோரை தடுத்து நிறுத்தி, அவர்களின் நடவடிக்கைகளை முடக்குவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், அவர்களின் கடின உழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்றும் றியர் அட்மிரல் ஹில் மேலும் கூறினார். 'இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா இணைந்து, ஆட்கடத்தல்காரர்களுக்கு வலுவான செய்தி ஒன்றை வழங்குவதோடு, சட்டவிரோத ஆட்கடத்தலை மேற்கொள்வோருக்கும், அவ்வாறு சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியா வருவோருக்கும் அவர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி பெற முடியாது என்ற செய்தியை இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா இணைந்து வழங்குகிறது. இங்கு உரையாற்றிய இலங்கை பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, 'இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய புவியியல் அடிப்படையில் பார்க்கும் போது, ஒரே வலயத்தில் அமைந்திருக்கும் அயலவர்கள் என்று கூற முடியும்.

அத்துடன், நாம் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமாகவும், எமது நட்புறவுகள் மூலமாகவும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கக்கூடிய பல்வேறு உதவிகள் மூலமாகவும் இரு தரப்பினரும் நன்மையடைகின்றனர். நாம் அதனை மிகவும் கௌரவிக்கின்றோம்' என்று கூறினார். மிகப் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட பெருமளவிலான மதிப்பு மிக்க ட்ரோன் இயந்திரங்களை இலங்கை பொலிஸ் நிறுவனத்திற்கு வழங்கியமைக்காக நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.




## நோன்பின் அறிமுகம்

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றான ரமழான் மாத நோன்பு தற்போது ஆரம்பமாகியுள்ளது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நிறைவேற்றப்படும் ஒரு கடமையே இது.

இந்த ரமழான் மாத நோன்பானது வருடத்திற்கு ஒரு தடவை நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாயக் கடமையாகும். ஏழை @ பணக்காரன், படித்தவன் @ பாரமரன், உயர்ந்தவன் @ தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி எல்லா மட்டத்தினரும் இக்கடமையை நிறைவேற்றுவது அவசியம். ஆனால் புத்திசுவாதீனமற்றவர்கள், சிறுகுழந்தைகள், குணப்படுத்த முடியாத தீவிர நோய் நிலைக்கு உள்ளாகியுள்ளவர்கள் போன்றோர் இக்கடமையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு ரமழான் நோன்பு காலத்தில் பாலூட்டும் தாய்மாராகவும், பிரயாணியாகவும், கர்ப்பம் அடைந்துள்ள பெண்களுக்கும் நோன்பு நோற்பது தொடர்பில் சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுபடும் நோன்பைக் கணக்கிட்டு வேறு நாட்களில் நோற்று நிறைவேற்ற வேண்டும். மற்றப்படி ஏனைய அனைவரும் இக்கடமையை உரிய காலத்தில் நிறைவேற்றத் தவறக்கூடாது. அந்த வகையில் நோன்பு என்பது தினமும் குறிக்கப்பட்ட நேர காலம் அதாவது அதிகாலை சஹர் முதல் மாலை மஹ்ரிப் வரையும் உண்பதையும் பருகுவதையும் மாத்திரமல்லாமல் பொய் பேசுதல், பொறாமை கொள்ளுதல், கோள் சொல்லுதல் உள்ளிட்ட வீணான காரியங்களைத் தவிர்த்து உடல், உள இச்சைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபடுவதைக் குறிக்கும். இதன் ஊடாக மனிதனை உடல் உள ரீதியாகப் புடம் போட்டு பக்குவப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தனியே இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது சமுதாயத்தினருக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடமையல்ல. மாறாக இஸ்லாத்திற்கு முற்பட்ட சமூகங்களுக்கும் இது கடமைக்கப்பட்டிருந்தது. இதனை அல் குர்ஆன் தெளிவாகக் குறிப்பிட்டு வைத்துள்ளது.

ஆகவே நோன்பின் நோக்கத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்ப அதனை நிறைவேற்றுவோம்.

மர்லின் மரிக்கார் ...

# சலுகை விலை பொருட்கள்; விற்பனை காலம் மேலும் நீடிப்பு

சதொச நிறுவனத்தின் ஊடாக சலுகை விலையில் வழங்கப்படும் 27 பொருட்களை மேலும் மூன்று மாத காலத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

நுகர்வோரின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சதொச நிறுவனத்தின் உபதலைவர் துஷார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் குறைந்த விலையில் பொருட்களை வழங்கி வருகின்ற காரணத்தினால், நுகர்வோரை ஏனைய வியாபாரிகளால் ஏமாற்ற முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சந்தையின் தீர்மானமிக்க சக்தியாக சதொச நிறுவனம் செயற்படுகின்றதாகவும், சதொசவின் சலுகைப் பொதிக்கு தற்போது பாரிய கேள்வி காணப்படுவதாகவும் சதொச நிறுவனத்தின் உபதலைவர் துஷார திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.



## அரசியல் பழிவாங்கல்கள் விசாரணை;

# பரிந்துரைகளை அமுலாக்கும் யோசனை பாராளுமன்றத்தில்

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கப்படவுள்ளது. 2015 ஜனவரி 8 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான யோசனையே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிர்வரும் 21 ஆம் திகதி மேற்படி யோசனையை சபையில் முன்வைப்பார் எனத் தெரியவருகின்றது. அத்துடன் இந்த விவகாரம் தொடர்பில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையானது அரசியல் உள்நோக்கம் கொண்டது எனவும், எதிரணி உறுப்பினர்கள் 10 பேரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான யோசனைகூட அதில் உள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

## சீன பாதுகாப்பு அமைச்சர்...

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் அரச தலைவர்கள், அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார். சீனாவின் பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்திற்கான திகதிகள் இன்னமும் உறுதியாகாத போதிலும் அவர் புதுவருடத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. இந்த விஜயத்தின் போது சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார். இதேவேளை இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயத்திற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## புதுவருட காலத்தில்...

இன்று வெள்ளிக்கிழமைக்குள்(16) அனைத்துபயனாளர்களுக்கும் இந்த 5000 ரூபா கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்,சிங்கள புத்தாண்டு புத்தாண்டின் போது மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சிரமங்களுக்கு தீர்வாக குறைந்த வருமானம் பெறும் 30 இலட்சம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என பெசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

சமுர்த்தி பெறுநர் குடும்பங்களின் ஏழு பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கமைவாக சமுர்த்தி பெறுநர் குடும்பங்கள், குறைந்தவருமானம் கொண்டகுடும்பங்கள், முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள், ஊனமுற்றோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள், சிறுநீரகநோய் காரணமான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள், நூறு வயதை கடந்தவர்களுக்கான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள், கோரிக்கை விண்ணப்பம் முன்வைத்து தகுதிபெற்ற குடும்பங்கள் என்பன தெரிவு செய்யப்பட்டன. மேற்படி 6 பிரிவுகளின் கீழுள்ள கோரிக்கை முன்வைத்து உதவிபெற தகுதியான குடும்பங்களும் இதில் உள்வாங்கப்பட்டிருந்தன.

அத்துடன் ஒரே குடும்பத்தில் இருவர் இதற்கான தகுதியைபெற்றிருப்பின், அக்குடும்பத்திற்கு உச்சபட்சமாக ரூ. 5,000 மாத்திரம் வழங்கப்படும் எனவும்அறிவிக்கப்பட்டது.

குடும்பங்களிடையே காணப்படும உப குடும்பங்களுக்கும் குறித்த ரூ. 5,000 கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதோடு அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை பிரதேச செயலாளரினால் எடுக்கமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டது. விசேட பண்டிகை கொடுப்பனவை பயனாளிகளுக்கு மிக விரைவாக வழங்கும் பொருட்டு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன், தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தில், பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை ஈடுசெய்து, அவர்களது நாளாந்த வாழ்க்கையை சீராக்கும் வகையில் இக்கொடுப்பனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அரசாங்கம் பலசந்தர்ப்பங்களில் ரூ .5 ஆயிரம் கொடுப்பனவை வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## 5000 ரூபா கொடுப்பனவு...

தமக்கான கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நேற்று முதல் மீண்டும் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த சமூர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி;

புத்தாண்டையொட்டி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுடன் அதற்கான நடவடிக்கைகள் கடந்த 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 18 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு மேற்படி 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் சகல கிராமசேவகர் மட்டத்தில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எவ்வாறெனினும் நேற்றுமுன்தினம் புத்தாண்டு தினத்தையொட்டி அதற்கான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு,இன்று (நேற்று 15ஆம் திகதி) முதல் மீண்டும் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டன.

உதவிபெறும் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அது தொடர்பில் மக்கள் கலவரப்பட தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் இக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு இனங்காணப்பட்ட 75 வீதமான குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமானவர்களுக்கு அடுத்து வரும் சில தினங்களுக்குள் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## இந்திய கடற்படை

சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி, இந்திய கடற்படைக் கப்பல் கொழும்புக்கு வருவதன் மூலம், இலங்கை மக்களுக்கு ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான செய்தியைத் தாங்கி வருகிறது.

இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியமாக இராணுவம் மற்றும் பாதுகாப்பில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

இந்த நாடுகளின் கடற்படைகள் கூட்டுப்பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டு, பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்று வருகின்றன. தற்போது இந்தக் கப்பலின் வருகையால் இரு நாடுகளுக்கு இடையிலான நட்பில் மேலும் நெருக்கமும், கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான மற்றொரு படியாகவும் இது விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜபுத்திர வம்சத்தினரின் நினைவாக பெயர் சூட்டப்பட்ட இந்தியாவின் ஐந்தாவது நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் ரான்விஜய்யில், ஏவுகணைகளை அழிக்கும் கருவிகளும், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணையும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் கேப்டன் நாராயணன் ஹரிஹரன் தலைமையில் இங்கு வந்தடைந்துள்ளது. அவர், மேற்கு கடற்படை பகுதியின் தளபதியான சுதர்சனாவை சந்தித்து, வியாழக்கிழமை இந்திய அமைதி காக்கும் படையின் (ஐபிகேஎஃப்) நினைவிடத்தில் மரியாதை செலுத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய இலங்கை உடன்படிக்கையின் ஒரு பகுதியாக 1987 முதல்1990 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரில் ஐபிகேஎஃப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

## 24 மணிநேரத்தில்...

அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் 12 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் இதில் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த காலகட்டத்தில் நாட்டில் மொத்தம் 123 விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 77 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துக்கள் அனைத்தும் பொலிஸில் பதிவாகிய விபத்துக்கள் மாத்திரமே , பதிவு செய்யப்படாத சம்பவங்கள் அதிகமாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விபத்துக்களில் 53 மோட்டார் சைக்கிள்கள், 30 முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்கள் அடங்குகின்றன.விபத்துக்களில் தொடர்புடைய வாகனங்களின் ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டுனர். இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். இதேநேரம், மதுபோதையில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

## அதிவிசேட வர்த்தமானி

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், 11 கடும்போக்குவாத அமைப்புகளை தடை செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டின் சமாதானத்தை தொடர்வதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கென, நன்னோக்குடனும் தேசிய பாதுகாப்பு பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் நலனையும் கருத்திற்கொண்டு குறித்த அமைப்புகள் தடை செய்யப்படுவதாக வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தௌஹீத் ஜமாத்,சிலோன் தௌஹீத் ஜமாஅத், சிறிலங்கா தௌஹீத் ஜமாஅத், அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத், ஜம்மியதுல் அன்ஸாரி சுன்னதுல் மொஹமதியா, தாறுல் அதர், சிறிலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், இராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு, அல்கய்தா அமைப்பு,சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு,சுப்பர் முஸ்லிம் அமைப்பு ஆகிய அமைப்புகள் நேற்று முன்தினம் (13) நள்ளிரவு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன. சீருடையை, உடையை, சின்னத்தை, தனிக்குறியை அல்லது கொடியை அணிதலோ, வெளிக்காட்டுதலோ, ஏந்துதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பள்ளிவாசல்களில்...

மாத்திரமே தொழுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புனித ரமழானை காலத்தில் பள்ளிவாசல்கள் கடைப்பிடிக்க வேண்டிய 30 வழிமுறைகளை கொண்ட விசேட சுற்றுநிருபத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். இந்த சுற்றுநிருத்திலேயே குறித்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை 18 வயதுக்கு குறைந்தவர்களை பள்ளிவாசல்களின் அனுமதிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கடற்றொழில் அமைச்சர்..

கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (15) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் அத்து மீறி நுழைந்து இலங்கை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். போர்க் காலத்தின் போது எமது மீனவர்கள் குறுகிய கடல் பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறான ஒரு பிரச்சினை உள்ள போது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய ரோலர் படகுகள் உட்பட படகுகளுக்கு அனுமதி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த விடயம் விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.க தேசிய பட்டியல்...

ஐக்கிய தேசிய கட்சியின் ஒருமித்த முடிவின் பேரில் ரணில் விக்ரமசிங்க எதிர்காலத்தில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்த தயாராகி வருவதாகவும் தலைவர் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தெற்கில் காலி பிரதேசத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## 109 வயதில் காலமான...

சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளரும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கொழும்புக்கிளையின் போஷகருமான அப்புத்துரை வேலுப்பிள்ளை தனது 109 ஆவது வயதில் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

02.01.1912 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் பிறந்த இவர் யாழ்ப்பாணக்கல்லூரியில் தன் கல்வியை தொடர்ந்ததுடன் கொழும்பு வெள்ளவத்தையை பின்னாளில் தன் வதிவிடமாகக் கொண்டார், அத்துடன் யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் மூத்து உறுப்பினராகவும் இருந்து நிர்வாகக் குழுவில் பலவருடங்கள் சேவையாற்றியிருந்தார்.

அமரர் ராஜலக்சுமியின் அன்புக்கணவரான வேலுப்பிள்ளை அமரர் யோகேஸ்வரி,திருநாவுக்கரசு ( கணக்காளர்), சாந்தினி (முன்னாள் பிரதி அதிபர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, ஓய்வு பெற்ற அதிபர் சைவ மங்கையர் வித்தியாலயம் ,கொழும்பு)ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்

அன்னாரின் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது.

## நான்கு நாட்களில்...

ரூபாயும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவும் சுற்றுலா செல்வோர் அதிவேக நெடுங்சாலைகள்ளைப் பயன்படுத்தியமையாலேயே இந்த வருமானம் கிடைக்கப்பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கிழக்கின் குரல்



## சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்களை மூடிவிட நடவடிக்கை

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

நோன்பு காலம் வீதி ஓரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லையென அறியக் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாதவும், இதன் போது உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் கூறினார். உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையை உறுதிப்படுத்தல், அதிக எண்ணெய், அதிக சீனி, அதிக உப்பு கொண்ட உணவுகளை விற்காதிருத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு சட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

## நிந்தவூரில் "தடம்பதித்த தாரகைகள்" நூல் வெளியீடு

அம்பாறை மாவட்ட குறுப் நிருபர்



ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மைமூனா காதர் செய்னுலாப்தீன் (நல்லம்மா ரீச்சர்) எழுதிய "தடம்பதித்த தாரகைகள்" நூல் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நிந்தவூர் அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் அஷ்ரஃப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

நிந்தவூர் வரலாற்றில் சகல துறைகளிலும் முதன் முதலாகத் தடம் பதித்தவர்களின் பெயர்கள், அவர்கள் சார்ந்த துறைகள் போன்ற விபரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

கல்வித்துறை, பொறியியல்துறை, சுகாதார வைத்தியத்துறை, விவசாய நீர்ப்பாசனத்துறை, விவசாய மன்னர்கள், சமய கலாசாரத்துறை, அரசியல் துறை, நீதி,சட்டத்துறை, நிர்வாகத் துறை, ஊடகத்துறை மற்றும் ஏனைய துறைகள் என்னும் பிரிவுகளில் முதன் முதலாகத் தடம் பதித்தவர்களின் விபரங்கள் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விழா மேற்படி பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் ஏ.எல்.நிஸாமுதீன் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைஸால் காசீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

விஷேட அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச.நவநீதன், நித்தவூர் பிரதேச செயலாளர் எம்.எம். அன்சார் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நிந்தவூர் அல்–அஷ்–ர:ஃக் பாடசாலை பழைய மாணவர் சங்க கூட்டம்

நிந்தவூர் அல்அஷ்ரஃக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் 2021ம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (13) பாடசாலையினுள் அமையப்பெற்றுள்ள காசிமி கேட்போர் கூடத்தில் கல்லூரியின் அதிபர் ஏ. அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் 2021/2022 வருடத்திற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பதவி வழித் தலைவராக பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூர், செயலாளராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எச்.ஏ.ஷிப்லி அஹமட், உப தலைவராக அறூப் அர்சாத், தொழில் திணைக்களம், கல்முனை, பொருளாளராக தென் கிழக்கு பல்கலைக்கழக உதவி நிதியாளர் எஸ். எச். சஹீத், உப பொருளாளராக ஆசிரியர் ஊடகவியலாளர் ஏ.பி. அப்துல் கபூர், உப செயலாளராக ரி.எம்.இன்சாப், முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம் கல்முனை

உட்பட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக 12 பேரும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள்



திருமலை மாவட்ட விசேட நிருபர்

மூதூர் நெய்தல் நகர் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நெய்தல் நகர் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சனசமூக நிலைய தலைவர் என் எம் முஸாஹிர் தலைமையில் நேற்று (15) காலை நடைபெற்றது .

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம் எம் ஏ அரூஸ் அந் நுஸ்ரா சமூக அபிவிருத்தி மையத்தின் தலைவர் எம் எஸ் எம் இர்பான் (ஜே பி) சனசமூக நிலைய செயலாளர் எஸ் எம் அஸ்கர் மற்றும் ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் மணல் கொள்ளை; அரச அதிபர் கண்டுகொள்ளாமலிருப்பது வேதனைக்குரியது

### பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம்

(மண்டூர் குறுப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தை பாதிக்கக்கூடிய பேசுபொருளாக இருப்பது மணல் அகழ்வுக் கொள்ளைக் கடத்தலாகும். ஆற்று மணல் அகழ்வுக் கொள்ளைக் கடத்தலினை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரோ அரசாங்க அதிபரோ கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும் என, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இடம்பெறும் ஆற்றுமணல் அகழ்வுக் கொள்ளை தொடர்பாக வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆற்றுமண் படுக்கைகளை அளவுக்கு மீறி அகழ்ந்து மண் வியாபாரத்தை நடாத்துவதனால் பல பிரச்சினைகளும் ஆர்ப்பாட்டங்களும் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர். தற்போது ஆற்றுமண் படுக்கைக்கு மேலாக வயல் காணிகளை திருத்தப்போகின்றோம் என்று அனுமதி பெற்று, வயல் காணிகளில் முப்பது அடிக்கு மேலாக ஆற்றுமணலை அகழ்ந்து கொண்டு செல்கின்றார்கள்.

ஒரு நாளைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 1000 கனரக வாகனங்கள் வெளி மாவட்டங்களை நோக்கிச் செல்வது மாத்திரமல்லாமல் ரயில் (தொடரூர்ந்து) பெட்டிகளிலும் மண்ணை கொண்டு செல்கிறார்கள். இதனால் மட்டக்களப்பு மாவட்டம் எதிர்காலத்தில் அழிந்துவிடும் ஒரு நிலைமை இருக்கின்றது.

ஆறுகளில் அளவுக்கதிகமான ஆற்றுமணலை அகழும்போது ஆறு ஆழமாவதனால் வயல்களுக்கு ஆற்றுநீரைப் பாய்ச்சுவது மிகவும் கடினமான ஒரு செயலாக இருக்கின்றது. செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கள்ள மண் ஏற்றும் வியாபாரம் மிகவும் தீவிரமாக இடம்பெறுவதனால், ஆற்றிலிருந்து வழமையாக நீர் பாய்ச்சும் வயல்களுக்கு நீரைப் பாய்ச்ச முடியாமல் ஆற்றுக்குள் இருந்து நீர் பெறும் நீர் பம்பிகளை பொருத்தி வயல்களுக்குள் நீர் பாய்ச்ச வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஆறுகளை கவனிக்கும் நீர்ப்பாசன திணைக்கள

பொறியியலாளர்கள் பிரதேச, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கலந்துகொண்டு ஆற்று மண் அகழ்வுக் கொள்ளைக் கடத்தல் இடம்பெறுவதை கண்டனத்துக்குரிய செயலாக கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

பொண்டுகள்சேனை செல்லும் வழியிலுள்ள மிகப் பிரதான பாலத்தின் அத்திவாரம் ஏழு அடி மண்ணிற்குள் இருக்க வேண்டும். ஆனால் தற்போது அந்தப் பிரதேசத்திலேயே தொடர்ச்சியாக மணல் அகழ்வதால் இரண்டு அடியே மண்ணுக்குள் இருப்பதாகவும், தொடர்ச்சியாக அந்தப் பிரதேசத்தில் மணல் அகழும் நிலைமையிருந்தால், இன்னும் ஒரு வருடத்திற்குள் பாலம் இடிந்துவிழும் நிலைமையும் காணப்படுகின்றது.

கடந்த போராட்ட காலங்களிலே வாகரை, செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவுப்பற்று போன்ற பிரதேச செயலகங்கள் பாதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படாமலுள்ள நிலையில், இவ்வாறான பிரதேசங்களிலேயிருந்து மணல் அகழ்ந்து வெளி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதனால் அந்தப் பிரதேசத்தின் பாதைகள் சிதைவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது என்றார்.

## கிழக்கில் அதிகரித்த உஷ்ணம்; பழங்களின் விற்பனை அதிகரிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கில் தற்பொழுது நிலவும் அதிகரித்த உஷ்ணம் காரணமாக மக்கள் அதிகம் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தங்களது அன்றாடத் தேவைகளை காலை வேளையிலயே நிறைவு செய்து கொண்டு வீட்டில் முடங்கி விடும் நிலை காணப்படுகின்றது.

உஷ்ணத்தைத் தணிப்பதற்காக நீராகாரப் பானங்கள், பழ வகைகளில் மக்கள் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக, கிழக்குப் பிரதேசங்களில் பழ வகைகளின் விற்பனை கணிசமானளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினசரி வெளி மாவட்டங்களிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு பெருமளவில் கொண்டுவரப்படும் வாழைப்பழம், பப்பாசிப்பழம், தோடம்பழம், தார்ப்பூசணி, வெள்ளரி, மங்குஸ்தான், அன்னாசி, மாம்பழம் உள்ளிட்ட பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை காரணங் காட்டியும், தற்போதைய உஷ்ணக் காலநிலையை சாதகமாகப் பயன்படுத்தியும் பழ வியாபாரிகள் அதிகரித்த விலையில் பழங்களை விற்பனை செய்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு தினசரி கொண்டு வரப்படும் பழவகைகள் கடைகளிலும், பிரதான வீதியோரங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த பழங்கள் விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

## மதுபான போத்தல்கள் கொண்டு சென்றவர் கைது

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் 21 மதுபான போத்தல்களை கொண்டு சென்ற ஒருவரை நேற்றுமுன்தினம் (14) கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் முச்சக்கர வண்டியொன்றில் 21 மதுபான போத்தல்களை கொண்டு சென்ற போதே போதைப் பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் கந்தளாய் நகரிலிருந்து பேராறு பகுதிக்கு முச்சக்கர வண்டியில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு சென்ற போது சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## "குழந்தையர் கொஞ்சுந்தமிழ்" நூல் வெளியீடு



திருமலை மாவட்ட விசேட நிருபர்

கிண்ணியா புலவர் மணி ஏ.எம். அப்துல் கஹ்ஹார் எழுதிய "குழந்தையர் கொஞ்சுந்தமிழ்" நூல் வெளியீடு கடந்த (12) கவிஞர் கஹ்ஹார் இல்லத்தில் இடம் பெற்றது.

கவிஞர் எம்.ஏ.அக்பர் சலீம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் சிறப்பு அதிதிகளாக முன்னாள் கிண்ணியா நகரசபை தவிசாளர், டொக்டர் ஹில்மி மகரூப், நகர சபை உறுப்பினர் எம்.ஏ. கலிபத்துள்ளாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கிராஅத் எப். முஸர்ரிப், வரவேற்புரை கவிஞர் ஜே. பிரோஸ்கான் நூல் ஆய்வுரை கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ் நயவுரை

கலாநிதி கே.எம்.எம். இக்பால் நிகழ்ச்சித் தொகுப்பு ஏ.கே. முஜாரத் ஆகியோர் மேற்கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை எறும்புகள் கலை இலக்கிய மன்றம் மேற்கொண்டிருந்தது.



வரலாற்றுப் பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பிலவ வருட புத்தாண்டையொட்டி காலையில் விசேட பூஜையும் அதனைத் தொடர்ந்து கைவிசேசமும் நடைபெற்ற போது... (படம்: காரைதீவு குறுாப் நிருபர்)




## கெர்க்ஸ்வோல்ட் தோட்டத்தில்

# கவனிப்பாரற்று கிடக்கும் பிரஜாசக்தி நிலையம்

ஹற்றன் விசேட நிருபர்



மலையகத்தில் மக்களின் நலன் கருதி அமைக்கப்படும் பொது நிறுவனங்கள் இன்று கவனிப்பாரற்று கிடக்கின்றன.

அந்தவகையில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்பட்ட பொகவந்தலாவை கெர்க்ஸ்வோல்ட் தோட்ட பிரஜாசக்தி நிலையமானது சுமார் 12 வருட காலமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன.

மலையக மாணவர்களுக்கு தொழில்பயிற்சி கல்வியை வழங்கும் நோக்குடன் 2008ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமானினால் இந்நிலையமானது அமைக்கப்பட்டது. கெர்கஸ்வோல்ட் தோட்டம் அதேபோல் சாஞ்சிமலை , வானகாடு , பொகவந்தலாவ நகர மாணவர்கள் என 5000 ற்கும் மேற்பட்டவர்கள் இந்த பிரஜா சக்தி நிலையத்தினை பயன்படுத்தி வந்தனர். இருந்த போதிலும் 2008ஆம் ஆண்டு இனந்தெரியாத நபர்களால் இந்நிலையத்தின் கண்ணாடி கல்லெறிந்து சேதபடுத்தப்பட்டு அதில் உள்ள உபகரணங்கள் அனைத்து திருடப்பட்டதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். கடந்த ஆட்சிகாலத்திலும் எவரும் இதை கண்டு கொள்ளவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய அரசாங்கம் இதற்கு புத்துயிர் கொடுத்து திறக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பலாங்கொடை பிரதேசத்தில் மண்சரிவு அபாயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை எகொடவலேபொட பிரதேசத்தின் பெனிபங்குவ என்ற இடத்தில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஹேமந்த பண்டார நேற்று தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பலாங்கொட மற்றும் சுற்றுப்புறப் பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் பிரதேசத்திலுள்ள பல வீடுகளின் சுவர்கள், நிலங்கள் மற்றும் கூரைகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் மேட்டு நிலங்களில் மண்சரிவுக்கான ஆரம்ப அடையாளங்கள் தென்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. இப்பகுதியில் மண்சரிவு ஏற்படுவதற்கான அடையாளங்கள் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன் அடையாளம் காணப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையையடுத்து இந்நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இந்நிலைமையை அடுத்து கட்டிடப் பரிசோதனை அதிகாரிகளின் அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு

நுவரெலியா தினகரன் நிருபர்

மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு நாளை (17.04.2021) சனிக்கிழமை நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முன்னணி இளைஞர் அணி செயலாளர் கதிர்காமத்தம்பி சுரேன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்த தெரிவிக்கையில், மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 61 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு இந்த இளைஞர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னிணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் விசேட விருந்தினர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னான்டோ, தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மலையக வரலாறு தொடர்பான ஆவணங்கள் இந்த மாநாட்டில் திரையிடப்படவுள்ளது. இதில் மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரன் ஒரு இளைஞனாக 30 வருடங்கள் கடந்து வந்த பாதையும் இந்த ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


மேலும் இந்த இளைஞர் மாநாட்டில் எதிர்கால மலையக இளைஞர்கள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளதுடன். எதிர்கால மலையக இளைஞர்கள் எனும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

# பொதுபிட்டிய அரச வைத்தியசாலையில் ஊழியர் தட்டுப்பாடு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கலவான பொதுபிட்டிய அரச வைத்தியசாலையில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையை கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக நிர்வாகம் தெரிவிக்கின்றது. அதுமட்டுமின்றி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். எனவே இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வினை பெற்றுத்தருமாறு வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை அடிப்படை வசதிகள் இன்மை, ஆளணி பற்றாக்குறை போன்றவற்றுக்கு மத்தியிலேயே இயங்கிவருவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர் வைத்தியசாலைக்கு 13 சிற்றூழியர்கள் தேவைப்பட்டுள்ள போதிலும் தற்போது 7 பேர் மட்டும் கடமையில் உள்ளனர்.மேலும் வைத்தியசாலையில் பல் வைத்தியர் ஒருவர் பணியாற்றி கொண்டிருக்கின்ற போதிலும் போதுமான சிற்றூழியர்கள் இன்மையினால் பொதுமக்களுக்கு முறையான சேவையை வழங்க முடியாதுள்ளது. பொறுப்பு வாய்ந்தவர்கள் வைத்திசாலை தேவைகள் தொடர்பில் அக்கறை செலுத்தி முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.




# நைகர்: பாடசாலை தீயில் சிக்கி 20 சிறுவர்கள் பலி



நைகர் தலைநகர் நியாமியில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீயின்போது அதில் சிக்கிக்கொண்ட குறைந்தது 20 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

வைக்கோல் குடிசையிலான வகுப்பறையில் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் வேளை இந்தத் தீ ஏற்பட்டுள்ளது.

தீ வகுப்பறை வாயில் கதவை அடைத்துக் கொண்டதால் பலரும் மதில் சுவரை தாண்டி தப்பித்ததாக ஆசிரியர் சங்க அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இதில் தப்பிக்க முடியாத மூன்று முதல் ஐந்து வயதான ஆரம்ப வகுப்பு மாணவர்களே அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர்.

தீ ஏற்பட்டபோது அந்த பாடசாலையில் சுமார் 800 மாணவர்கள் இருந்ததாக ஆசியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

189 நாடுகளுக்கான ஐ.நா வளர்ச்சிக் குறியீட்டிற்கு அமைய நைகர் உலகின் மிக ஏழ்மையான நாடாக உள்ளது.

## செப்டெம்பர் 11 இல்:

# ஆப்கானில் இருந்து அமெ. படைகள் முற்றாக வாபஸ்



அமெரிக்காவின் நீண்ட போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆப்கானில் இருந்து அமெரிக்க துருப்புகள் வாபஸ் பெறப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

ஆப்கானில் இருக்கும் ஏனைய நேட்டோ துருப்புகளும் அந்நாட்டில் இருந்து வெளியேறவுள்ளன. இவ்வாறு வெளிநாட்டு படைகள் வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு முழுமையாக வாபஸ் பெறப்படவுள்ளன.

ஆப்கானுக்கு படையெடுக்கக் காரணமான செப்டெம்பர் 11 தாக்குதல் இடம்பெற்று சரியாக 20 ஆண்டுகளில் அமெரிக்கா, ஆப்கானில் இருந்து வெளியேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


அந்தத் தாக்குதலை நடத்தியோரை அழித்துவிட்டதால், ஆப்கானிஸ்தான் சென்ற இலக்கு நிறைவு பெற்றுவிட்டதாக பைடன் தெரிவித்தார். எனினும் தலிபான்கள் மற்றும் ஏனைய கடுப்போக்காளர்களுக்கு எதிரான போரில் தெளிவான வெற்றி பெறாத நிலையில் படைகள் வாபஸ் பெறப்படுவது குறித்து விமர்சனங்களும் எழுந்துள்ளன.

ஆப்கானில் இருக்கும் 2,500 அமெரிக்க துருப்புகளுடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஜோர்ஜியா உட்பட பிரதானமாக நோட்டோ நாடுகளின் சுமார் 7000 படையினர் உள்ளனர். ஆப்கான் போரினால் 2,448 அமெரிக்க படைகள் கொல்லப்பட்டிருப்பதோடு 2 ட்ரில்லியன் டொலர் இழப்பை சந்தித்துள்ளது. ஆப்கானில் அமெரிக்க துருப்புகள் உச்சத்தில் இருந்த 2011 ஆம் ஆண்டில் அங்கு 100,000 படையினர் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர்.

அமெரிக்கப் படைகள் விலக்கிக் கொள்ளும் நிலைமைக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் விதமாக அமைதிப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து வருவதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த புதன்கிழமை தான் பைடனுடன் தொலைபேசியில் பேசியதாகவும், அமெரிக்காவின் முடிவை மதிப்பதாகவும், சுமுகமான முறையில் இந்த மாற்றம் நிகழ்வது தொடர்பாக அமெரிக்காவுடன் இணைந்து வேலை செய்வதாகவும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

# செவ்வாயில் ஹெலி பறப்பதில் தாமதம்



செவ்வாய் கிரகத்தில் ஹெலிகொப்டர் பறக்கும் நிகழ்வு தொழில்நுட்ப கோளாறு காரணமாக 2ஆவது முறையாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெர்சிவரன்ஸ் விண்கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த ஹெலிகொப்டரை பறக்க விடும் முயற்சிகள் நாசாவால் மேற்கொள்ளப்பட்டன. விரைவில் கோளாறு சரி செய்யப்பட்டு செவ்வாயில் ஹெலிகொப்டர் பறக்கும் நிகழ்வு எந்தத் திகதியில் நடைபெறும் என்பது அடுத்த வாரத்தில் அறிவிக்கப்படும் என்று நாசா தெரிவித்துள்ளது.

இன்ஜினியுட்டி என்ற பெயருடைய அந்த ஹெலிகொப்டர் 1.8 கிலோ எடை கொண்டதாகும்.

# அஸ்ட்ராசெனக்கா முற்றாக நிறுத்தம்



கொரோனா தொற்றுக்கு எதிரான ஒக்போர்ட் – அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தை முற்றிலும் நிறுத்த டென்மார்க் தீர்மானித்துள்ளது.

அவ்வாறு அந்தத் தடுப்புமருந்தின் பயன்பாட்டை முற்றிலும் நிறுத்த முடிவெடுத்திருக்கும் முதல் நாடாக அது உள்ளது.

அந்தத் தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவதால், அரிய இரத்த உறைவும் அதனால் மரணமும் ஏற்படும் சாத்தியம் இருப்பதாக ஐரோப்பிய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு கடந்த வாரம் கூறியிருந்தது. அதனைத் தொடர்ந்து டென்மார்க் இந்த முடிவை எடுத்துள்ளது.

இருப்பினும் அந்த மருந்துக்குத் தடை விதிக்க ஐரோப்பிய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு பரிந்துரைக்கவில்லை.

# சுயஸில் சிக்கிய கப்பல் பறிமுதல்



சுயஸ் கால்வாயில் தரைதட்டி நின்ற சரக்குக் கப்பல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் கால்வாய் ஆணையம் தெரிவித்துள்ளது.

எவர் கிவன் எனும் அந்த ஜப்பானியக் கப்பலின் உரிமையாளர்கள் 900 மில்லியன் டொலர் இழப்பீடு செலுத்தத் தவறியதால், கப்பல் பறிமுதல் செய்யப்பட்டதாக சுயஸ் கால்வாய் ஆணையத் தலைவர் கூறினார்.

கடந்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து சுமார் ஒரு வாரமாக தரைதட்டி நின்ற அந்தக் கப்பலை இழுவைப் படகுகள் வெற்றிகரமாக அப்புறப்படுத்தின.

மாபெரும் கப்பல் குறுக்கே நின்றதால், பல கப்பல்கள் கால்வாயைக் கடக்கமுடியாமல் சிக்கிக் கொண்டன. இதனால் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே நாள்தோறும் சுமார் 9.6 பில்லியன் டொலர் மதிப்புள்ள சரக்கு வழி மறிக்கப்பட்டது.

# யுரேனியத்தை மேலும் செறிவூட்டுகிறது ஈரான்



ஈரானிய அணு உலை ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாக ஈரான் 60 வீதம் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை உற்பத்தி செய்யப்போவதாக அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதம் தயாரிக்க யுரேனியத்தை 90 வீதம் செறிவூட்ட வேண்டிய நிலையில் இது அந்த முயற்சியை நெருங்குவதாக உள்ளது.

நன்டான்ஸ் அணு உலையின் மின் கட்டமைப்பின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் யூரேனிய மையநீக்கிகளுக்கு சேதம் ஏற்பட்டது.



# ரமழான் மாத நோன்பு:

## மனித வாழ்வை புடம்போடும் காலம்

அஷ்ஷெய்க் ரிஷாட் நஜிமுதீன் (நளீமி)

ரமழான் மாத நோன்பு உண்மையில் ஓர் வித்தியாசமான அனுபவம். அன்றாட வாழ்வொழுங்கில் திடீர் மாற்றங்களை நாம் இறைவனின் ஏவல் என்ற ஒரே காரணத்தால் ஏற்படுத்திக் கொள்கிறோம். ஸஹர் நேரம் என்று ஆரம்பிக்கும் நாள் அதிகாலை தொடக்கம் மஃரிப் வரை எவ்வித உணவோ, குடிபானமோ இன்றி ஏனைய 11 மாதங்களையும் விட முற்றிலும் வித்தியாசமான வாழ்வொழுங்காக அம்மாதம் அமைந்துவிடுகிறது. அதன் ஆழமான கருத்து எமது கவனத்தை பெறவேண்டியிருக்கிறது. மனித வாழ்வின் இயல்பான ஓட்டத்திலிருந்து சற்று ஒதுங்கி எம்மை நாம் மீள்வாசிக்கிறோம் என்பதுதான் அதன் அர்த்தம். எமது மனோநிலை (Mindset), வாழ்வு, நிகழ்வுகள் பற்றிய கண்ணோட்டம் (Perception), உளவியல் (Phychology) என அனைத்தையும் ரமழானில் மீள்வாசிக்க முனைகிறோம் என்ற மிகப்பெரும் இலக்கு அம்மாதத்தினுள் பொதிந்திருக்கிறது.

மீள்வாசிப்பு மூன்று பரிமாணங்களைக் (Dimensions) கொண்டதாக இருக்க வேண்டும் என கூறலாம்:

1. இறைவனுடனான நெருக்கத்தை மீள்வாசித்தல்:

இறைவன் பற்றிய சிந்தனையே ஒரு முஸ்லிமின் அடிப்படை சிந்தனை. அம்மையப் புள்ளியை சுற்றியே அவனது வாழ்வு சுழல வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது. வணக்குத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றும் அவ்விடத்தை நிரப்பிவிடுவதையோ அல்லது அவனல்லாத இன்னொன்றின் மீது அடிமைத்தனத்தை காட்டுவதோ ஒரு முஸ்லிமைப் பொருத்தவரை பிழையானது. குறிப்பாக சட்டத்தை முதன்மைப்படுத்திய இன்றைய வாழ்வொழுங்கில் எம்மை நாம் மிகக் கவனமாக ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. பணம், பதவி, அந்தஸ்து போன்றன எம்மை அடிமையாக்கிவிடுவது இறைவன் பற்றிய முஸ்லிமின் சிந்தனைக்கு மிகப்பெரும் ஆபத்தாக மாறிவிடுகிறது. அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரம் அடிமையாகி சுதந்திர பிரஜையாக (Autonomous human being) இருப்பது அவசியம். செயல்களின் போது அடிக்கடி "ஏன் செய்கிறேன்" என்ற கேள்வியை கேட்டுக் கொள்வது எமது எண்ணத்தை (Intention) தூய்மையாக வைத்துக் கொள்ள துணைபுரிகிறது.

இறைவனை உள்ளத்தில் ஆழமாக மனதில் இருத்திக் கொள்வதற்கான அழகியதோர் சந்தர்ப்பம் ரமழான் மாதம். அல்குர்ஆன் இறங்கிய மாதமது. அல்குர்ஆன் போல இறைவனை சரியாக விளக்கும் எந்தவொன்றும் இல்லை. இறைவன் பற்றிய உரையாடலில் மனித அறிவு ஓர் எல்லையோடு நின்றுவிடுகிறது. மிகப்பெரும் விஞ்ஞான வளர்ச்சியை நோக்கி நகரும் உலகு இறைவனின் யதார்த்தம் பற்றிய தேடலில் இறைவழிகாட்டலில் தங்கியிருக்க வேண்டியுள்ளது என்பது இன்று பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாக மாறியிருக்கிறது. மனித அறிவின் எல்லை எம்முன்னால் தோற்றமளிக்கிறது. இறைவனை அறிந்து கொள்ள அவனது படைப்புக்களும் எமக்குதவுகின்றன. எம்மை சூழ்ந்திருக்கும் சூழல் அதன் படைப்பாளன் நோக்கி வழிகாட்டுகிறது. அல்குர்ஆன், உலகப்படைப்புக்களை ஆழ்ந்து வாசிக்கும் போது சில உண்மைகள் எமக்கு புலப்படுகின்றன. நான் இவ்வுலகில் நிலையாக வாழப்போவதில்லை, ஒரு நாள் மரணிக்கப்போகிறேன், எனது செயல்களுக்கு நானே பொறுப்பானவன், அவை பற்றி விசாரிக்கப்படப் போகிறேன், வாழ்வுக்கென்று ஓர் அர்த்தமிருக்கிறது, அதனை வீணாக களித்துவிட முடியாது, மீழ எழுப்பப்பட்டு கூலி வழங்கப்படப் போகிறேன் போன்ற மனித சிந்தனையை குழப்பும் அடிப்படை கேள்விகளுக்கான விடையை எம்மால் பெற முடிகிறது.

இறைவன் பற்றிய நம்பிக்கையின் விளைவுகளில் மிக முக்கியமானது இறைவன் விதித்த வணக்கங்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல் என்பது. தொழுகை போன்ற வணக்கங்களில் சீரியசாக ஈடுபடுவது இறைவன் மீதான அன்பின் வெளிப்பாடுகள் எனலாம். அவன் மீதுகொண்ட அன்பின் காரணமாக அவனை நினைவு கூறவும் அவனுடன் உரையாடவும் ஒரு முஸ்லிம் பெற்றுக் கொள்ளும் பெறுமதிமிக்க நேரங்கள் அவை. இவ்வகையான ஆன்மீக பரிமாணங்களை நோன்பு காலத்தில் முஸ்லிம் ஆழமாக பதித்துக் கொள்வானாயின் அதுவே அவனது வெற்றியாக மாறிவிடுகிறது.

2. தன்னைப் பற்றி மீள் வாசித்தல்

சமூகத்துடன் கலந்துவாழ வேண்டும் என கூறும் இஸ்லாம், தற்காலிகமாக தனிமையில் ஒதுங்கி தனது உள்ளத்துடன் ஆழமான உரையாடல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வலியுருத்துகிறது. இப்பின்னணியில் தான் நபியவர்கள் ஹிரா குகைக்கு சென்றார்கள். ரமழானில் இஃதிகாப் இருப்பதன் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று இது. நபியவர்கள் சமூகத்தையும் அதன் ஒழுங்கையும் பார்த்து ஒரு வகையான குழப்பத்திற்காளாகினார்கள். வாழும் சூழலை அவ்வாறே ஏற்றுக் கொள்ளவில்லை. விமர்சனப் பார்வையை ஏற்படுத்திக் கொள்கிறார். தீர்வு தேடி தனிமைக்கு செல்கிறார். இப்போக்குதான் இன்றும் எமக்கு தேவைப்படுகிறது. தனிமையும் இஃதிகாபும் அவசியமானவையாக உள்ளன. சமூக நடத்தைகளும் அதன் கட்டமைப்பும் சரியானதா, இன்றிருக்கும் பிரச்சினைகள் யாவை, ஏன் அவை தோற்றம் பெற்றிருக்கின்றன, பிரச்சினைகளின் ஆணி வேர் எது, தீர்வுகள் நோக்கி எவ்வாறு நகர்வது போன்ற கேள்விகளை சுமந்த நிலையில் தற்காலிக தனிமையொன்று தேவைப்படுகிறது. உள்ளத்தோடு உரையாடி எம்மையே நாம் விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டிய தேவை உள்ளது.

நபியவர்கள் தனது சூழலுக்கும் அதன் வாழ்வொழுங்குக்கும் அடிமையாகிப் போகவில்லை. விமர்சன பூர்வமாக அணுகினார்கள். சூழலை ஏற்றுக் கொள்ளாமல் நிலைமாற்றும் சீர்திருத்தமொன்றை (Transformation reform) சாத்வீகமாக முன்னெடுக்கிறார்கள். இன்றிருக்கும் சூழலுக்கும் இது பொருந்துகிறது. எமது சூழலை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. விமர்சன கண்ணோட்டத்துடன் அணுகலாம். அன்றாட வாழ்வில் உருவாக்கப்பட்டிருக்கும் "நுகர்வுக் கலாச்சாரம்" ( Culture of consumerism) ஏற்படுத்தும் பாதிப்புக்கள் மிக விரிந்தது. ஆபத்தானது. இதனை எவ்வாறு மாற்றுவது என்பது ஆழ்ந்து உரையாட வேண்டியுள்ளது. நோன்பு உணவு, குடிபானம் என்பவற்றுடன் நேரடியாக தொடர்புபடுகிறது. நோன்பு காலத்தில் வித்தியாசமான நுகர்வமைப்புக்குள் ஒரு முஸ்லிம் நுழைகிறார். இன்றிருக்கும் நுகர்வமைப்பு பற்றி நோன்பு நோற்றிருப்பவர் ஆழமான உரையாடலொன்றை தன்னில் ஏற்படுத்திக் கொள்வதும் அதன் சிக்கல்களை மாற்ற முயற்சிப்பதும் நோன்பின் இலக்குகள் எனும் கருத்தாக்கத்துடன் நெருக்கமாக தொடர்புபடுகிறது.

தனிமையில் உரையாடுவதனூடாக அடுத்தவர் மனோநிலையை சரியாக புரிந்துகொள்ள முடிகிறது. இன்று முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை என்ற கோஷம் பல இடங்களில் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. மீண்டும் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற அழைப்பு அடிக்கடி விடுக்கப்படுகிறது. ஒற்றுமையின்மைக்கான அடிப்படை காரணியான ஒற்றைப்பார்வையை நீக்கும்வரை ஒற்றுமை கோஷம் எவ்வித ஆக்கபூர்வமான மாற்றத்தையும் கொண்டு வரப்போவதில்லை. அடுத்தவரது உணர்வு, நிகழ்வுகளை அணுகும் முறைமை, சிந்தனைப் பின்னணி போன்றவற்றினூடாக அடுத்தவர்களை புரிந்துகொள்வதே சரியான ஒற்றுமையை கொண்டுவரும் எனலாம். ஓர் நிகழ்வை எமது நிலையிலிருந்து புரிந்துகொள்வது போல அடுத்தவரது நிலையிலிருந்தும் புரிந்துகொள்வதையே இங்கு கூறுகிறோம். எம்மை அடுத்தவராக மாற்றி, அடுத்தவரது நிலையிலிருந்து அவதானித்தல் எனலாம். அதன் அர்த்தம் நாம் அவராக மாறிவிடுவதல்ல. பிரச்சினையை சரியாக புரிந்துகொள்ளவும் முறையான தீர்வை அடைந்துகொள்ளவும் ஏற்படுத்திக் கொள்ளும் தற்காலிகமான மாற்றம் இது.

3. சமூகத்துடனான தொடர்பை மீள் வாசித்தல்:

தற்காலிக தனிமை நிரந்தரமானதாகிவிட முடியாது. சமூக விவகாரங்களில் ஈடுபடுவதும் அது எதிர்நோக்கும் பிரச்சினைகளை உரையாடுவதும் தீர்வுகளை தேடுவதும் இன்றியமையாதது. குடும்பம் மற்றும் சமூகத்தின் பல வீனமானவர்கள் மீது எமது கவனம் குவிக்கப்பட வேண்டும். இன்றைய உலக ஒழுங்கில் குடும்ப ஒழுங்கு மிகப் பெரும் கேள்விக்குறியாகி வருகிறது என்பது அனைவரும் அறிந்தது. குடும்ப உறவை வலுவானதாக எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது பற்றிய ஆழமான புரிதலை பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. நபியவர்களது வாழ்வில், குறிப்பாக ஆரம்ப காலங்களில் கதீஜா நாயகியின் பங்களிப்பை அவதானிப்பதன் மூலம் ஒரு பெண் ஆற்ற முடியுமான பங்களிப்புகளை புரிந்துகொள்ள முடிகிறது. கதீஜா நாயகி மீது நபியவர்கள் எவ்வளவு தூரம் அன்பு கொண்டிருந்தார் என்பதையும் பல நிகழ்வுகள் கூறிச் செல்கின்றன.

சமூகத்தில் பலவீனர்களாக பலர் இருக்கின்றனர். ஏழைகள், அநாதைகள் என அவர்களின் வகைகள் பலதாக விரிவடைகிறது. இவர்கள் மீதான எமது கடமைகள் என்ன என்ற கேள்வி மிக முக்கியமானது. இன, மத பேதமின்றி மனிதத்துவம் முக்கியம் பெற வேண்டும். சமூக நிகழ்வுகளில் வினைத்திறனுடன் ஈடுபடுவது பற்றிய சிந்தனை எமக்கு தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் ரமழான் நேரடியாகவும் மறைமுகமாகவும் கற்றுத் தருகிறது.

# ரமழானும் ஆன்மீகமும்

அருள்மிகு ரமழான் மாதத்தை நாம் அடைந்திருக்கிறோம் அல்ஹம்து லில்லாஹ்.

இம் மாதத்தில் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். இம்மாதத்திலேயே அல்லாஹுத்தஆலா சங்கையான அல்குர்ஆனை இறக்கி வைத்தான். இம்மாதம் ஒவ்வொரு அடியானும் அல்லாஹ்வுடனான நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக அருளப்பட்டதாகும். இது துஆவினதும் பொறுமையினதும் சதகாவினதும் மாதமாகும்.

**ரமழானில் கடைபிடிக்க வேண்டிய ஆன்மீக வழிகாட்டல்கள்:**

1. ரமழான் மாதத்தின் அனைத்து நோன்புகளையும் பேணுதலுடன் நோற்றல்.
2. பர்ளான, சுன்னத்தான இபாதத்களில் அதிகளவு கவனம் செலுத்தல். குறிப்பாக, சமூக வலைத்தளங்களிலும் வேறு அனாவசியமான விடயங்களிலும் நேரத்தை வீணடிப்பதை முற்றாக தவிர்த்தல்.
3. இரவு நேர வணக்கங்களிலும் முடியுமான அளவு ஈடுபடுதல். அதன் மூலம் நேரத்தை வீணாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளல்.
4. அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட இம் மாதத்தில் அல்குர்ஆனுடனான இறுக்கமான தொடர்பை அதிகரித்தல் வேண்டும். மேலும் அதனை அதிகம் ஓதுவதுடன் அதன் போதனைகளை எமது வாழ்வில் எடுத்து நடப்பதும், பிறருக்கு அதன்படி வாழ வழிகாட்டுவதும் அல்குர்ஆன் மீதான எமது கடமைகள் ஆகும். ஒவ்வொரு தனி நபரும் அதிகமதிகம் அல்குர்ஆனை ஓதி வருவதுடன் குறைந்தபட்சம் நாளாந்தம் ஒரு 'ஜுஸ்உ'வையாவது ஓத முயற்சித்தல்.
5. தன்னைத் தானே சுயவிசாரணை செய்வதற்குரிய சந்தர்ப்பமாக இந்த ரமழானை ஆக்கிக் கொள்ளுதல்.
6. ரமழானின் இறுதி 10 தினங்களில் இஃதிகாப் எனும் அமல் முக்கியத்துவம் பெறுகின்றது. மஸ்ஜித் நிர்வாகிகள் இந்த அமலை ஊர் மக்கள் நிவேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்யும் போது பொது சுகாதார அதிகாரிகளின் அனுமதியையும் பெற்றுக் கொள்ளல்.
7. துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்ற மகத்தான இம்மாதத்தில் உலகளவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிமிக்க சூழல் நீங்கி முழு நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்கு திரும்பவும், அவர்கள் ஆரோக்கியத்துடனும், சுகாதாரத்துடனும், சுபீட்சமாக வாழவும், எமது தேவைகள் நிறைவேறவும் பிரார்த்தித்தல். நோன்பு திறக்கும் நேரம், ஸஹர் நேரம், அதானுக்கும் இகாமத்துக்கும் இடைப்பட்ட நேரங்களை அதிகமதிகம் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கு பயன்படுத்திக் கொள்ளல்.

இவ்வான்மீக வழிகாட்டல்களைப் பின்பற்றி இப்புனித ரமழானை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வோமாக!

எல்லாம் வல்ல நாயன் நம்மனைவருக்கும் அவனது றஹ்மத்தையும், மஃபிரத்தையும், நரக விடுதலை என்ற பாக்கியத்தையும் பெற்ற கூட்டத்தில் எம்மனைவரையும் ஆக்கியருள்வானாக.

அஷ்ஷைக்
எம். அர்கம் நூராமித்
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா.

# ஸஹர் செய்வதன் சிறப்பு....

*1. ஸஹர் செய்யுங்கள். ஏனெனில் ஸஹர் செய்வதில் பரகத் உள்ளது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

***(அறிவிப்பவர்: அனஸ் (ரழி) ஆதாரம் முஸ்லிம்.***

*நமது நோன்பிற்கும் வேதக்காரர்களின் நோன்பிற்கும் இடையில் வித்தியாசம் சஹர் செய்வதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.* ***(அறிவிப்பவர்:அம்பர் இப்னுல் ஆஸ்(ரழி). ஆதாரம் முஸ்லிம்)***

*2. ஸஹரை தாமதப்படுத்தி நோன்பு திறப்பதை விரைவு படுத்தும் வரை மக்கள் நன்மையில் நீடித்து உள்ளார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.* ***(அறிவிப்பவர்: அபூதர்(ரழி), ஆதாரம் முஸ்லிம்)***

*3. நோன்பு திறப்பதை விரைவு படுத்தும் காலமெல்லாம் மக்கள் நன்மையில் நிலைத்திருப்பார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.* ***(அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரழி), ஆதாரம் முஸ்லிம்)***

*நானும் மஷ்ரூக் (ரழி) அவர்களும் ஆயிஷா(ரழி) அவர்களிடம் சென்றோம். இறை நம்பிக்கையாளர்களின் அன்னையே! இரு நபித் தோழர்களில் ஒருவர் விரைந்து நோன்பு திறக்கிறார்( மஃரிப் தொழுகை ஆரம்ப நேரத்திலே) விரைந்து தொழுகிறார். மற்றொருவர் நோன்பு திறப்பதை தாமதப்படுத்துவதோடு மஃரிப் தொழுகையையும் தாமதப்படுத்துகிறார். இவ்விருவரில் யார் செய்வது சரி என்று கேட்டோம். அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள் விரைந்து நோன்பு திறந்து விரைந்து தொழுபவர் யாரென வினவியபோது அதற்கு நாங்கள் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்( ரழி) என்றோம். அதற்கு இவ்வாறே நபி(ஸல்) அவர்கள் செய்வார்கள் என்று கூறினார்கள்* ***(அறிவிப்பவர்: அபு அத்திய்யா மாலிக் பின் ஆமிர்(ரழி), ஆதாரம் முஸ்லிம்.***

*மேற்சொன்ன ஹதீஸ்களிலிருந்து சஹர் உணவின் மூலம் அல்லாஹ் நமக்கு பரக்கத் செய்கிறான். அந்த நேரத்தில் ஏதாவது சாப்பிடுவதன் மூலம் அன்றைய பகல் வேளையில் களைப்பின்றி இபாதத் செய்வதற்கும் எளிய வேலைகளை செய்வதற்கும் இந்த சஹர் உணவு ஓர் உந்து சக்தியை வழங்குகிறது. அதேபோல் யூத கிறிஸ்தவர்கள் சஹர் நேரத்தில் எதுவும் சாப்பிடாமல் சஹர் செய்வார்கள். அவர்களுக்கு மாற்றமாக நமது நடைமுறை இருக்க வேண்டும் என்பதையும் இந்த ஹதீஸ் விளக்குகிறது.*

*மேலும் ஸஹர் செய்வதை அதன் கடைசி நேரம் வரை பிற் படுத்துவதையும் இஸ்லாம் வரவேற்கிறது. சிலர் இரவு 12 மணி அளவில் தூங்கும் போதே சஹர் செய்து விட்டு தூங்குகிறார்கள். இன்னும் சிலர் 3 மணி அளவில் ஸஹர் செய்து விட்டு தூங்குகிறார்கள். இதை தவிர்ந்து ஸஹர் நேரத்தின் கடைசி பகுதியில் ஸஹர் செய்வதின் மூலம் நபிவழியை நடைமுறைப்படுத்த முடியும்.*

தொகுப்பு:
ஏ.ஸி அப்துல் ஸலாம்
பலாங்கொடை.

# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

## ரமழான் மாத மூன்று நேரங்கள்...

ரமழானில் எவ்வளவு முக்கியமான வேலையாக இருப்பினும் அம்மூன்று நேரங்களையும் அலட்சியம் செய்யாமல் இருக்க முயற்சிப்போம். ஏனெனில், ஒரு மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு அந்நேரங்கள் சமமாக இருக்கின்றன.

எனவே, அந் நேரங்களைப் பேணிக் கொண்டு, அவற்றை வணக்க வழிபாடுகளில் கழிக்கும் போது மொத்தம் 90 மணித்தியால வணக்கங்களின் நன்மைகளை ஒரு நாளிலேயே சம்பாதித்துக் கொள்ள முடியும்.

அவை,

# நோன்பு திறக்கும் நேரம்

இப்தாருக்குரிய ஏற்பாடுகளை நேர காலத்துடன் முடித்துக் கொண்டு, பிரார்த்தனை செய்வதில் முழுமையாக எங்களை ஈடுபடுத்திக் கொள்வோம்.



ஏனெனில், நோன்பாளி இப்தாருடைய நேரம் கேட்கும் துஆ மறுக்கப்பட மாட்டாது. எனவே, எங்களுக்காகவும் எங்கள் அன்புக்குரியவர்களுக்காகவும் பிரார்த்திப்பதற்காக அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வோம்.

பிரார்த்தனையின் போது மரணித்தவர்களை மறந்துவிடக் கூடாது. ஏனெனில், எங்கள் துஆவின் பால் அவர்கள் தேவையுடையவர்களாக இருக்கின்றனர்.

#இரவின் இறுதிப் பகுதி

அல்லாஹ்வுடன் தனிமையில் உறவாடுவதற்குரிய நேரமாக இந்நேரத்தை ஆக்கிக் கொள்வோம். ஏனெனில், "நான் கொடுப்பதற்காக என்னிடம் கேட்போர் யாரும் உள்ளனரா? " , "நான் மன்னிப்பதற்காக என்னிடம் மன்னிப்புக் கோரும் எவரும் உள்ளாரா?" என்று அல்லாஹ் அழைத்துக் கொண்டிருக்கும் பாக்கியமிக்க நேரமது.

அதனால் இந்நேரத்தில் அதிகம் பாவ மன்னிப்புக் கோறுவோம்.

# பஜ்ர் தொழுகை முடிந்ததிலிருந்து சூரிய உதயம் வரையிலான நேரம்

தொழுத இடத்திலே அமர்ந்திருந்து அல்குர்ஆனை ஓதுதல், இறை சிந்தனை போன்றவற்றில் இந்நேரத்தைக் கழிப்போம் .

★இந்நேரங்களைப் பேணி, வணக்கங்களில் ஈடுபடுவதுடன் ஏனைய நேரங்களில் திக்ர் (இறை நினைவு) செய்தல், புறம் பேசுவதிலிருந்து தவிர்ந்து நடத்தல் போன்றவற்றில் கரிசனையாய் இருப்போம்.

மேலும், கடமையான தொழுகைகளைத் தவறாமல் நிறைவேற்றுவதற்கு மனதளவில் உறுதி கொள்வோம். மேலும், உபரியான வணக்கங்களை முடியுமான அளவு அதிகரிக்க முயற்சிப்போம்.

ஏனெனில், இந்த முப்பது நாற்களும் விரைவாகவே சென்று, ரமழான் மாதமும் நிறைவு பெறும்.

★மூன்று வகையான துஆக்கள் இருக்கின்றன. அவற்றை ஸுஜூதில் அல்லாஹ்விடம் கேற்பதற்கு மறக்கக் கூடாது.

1. இறைவா! என்னுடைய இறுதி முடிவை சிறப்பானதாக ஆக்கி வைப்பாயாக.
2. இறைவா! நான் மரணிக்கும் முன்னர் நான் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்தருள்வாயாக.
3. உள்ளங்களைப் புரட்டுபவனே! உனது மார்க்கத்திலே எனது உள்ளத்தை உறுதிப்படுத்துவாயாக.

இச்செய்தியை நன்மை நாடிப் பிறருக்கு எத்திவைக்கும் போத, நிச்சயம் எல்லாம் வல்ல அல்லாஹ் ஈருலகக் கஷ்டங்களையும் நீக்கி வைப்பான்.

முஹிப்புல் ஹக்...

# ஸகாத்,ஸதகாக்கள் மூலம் அநாதைகள் பராமரிப்பு நிலையங்களை வளப்படுத்துவோம்

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் மூலமாகவும் மற்றும் கைது செய்யப்பட்ட சிறார்களை சமூக மயப்படுத்துவதற்காகவும் நீதிமன்றத்தின் ஊடாகவும் இச்சிறுவர்களை அநாதைகள் இல்லங்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு வழங்கி வைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வி ஆன்மிகக் கல்வி தொழில்நுட்பக் கல்வி என வழங்கப்படுகிறது. நாட்டின் சிறந்த பிரஜைகளாக இப்பிள்ளைகள் இங்கு உருவாக்கப்படுகின்றனர். இந்த நிலையத்தில் தற்போது 04 வயது முதல் 18 வயது வரையிலான 20 பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

04 வயதில் வரும் பிள்ளைகள் அனைவருக்கும் முன்பள்ளிப் பாடம் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் அருகிலுள்ள அரச பாடசாலைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகள், க. பொ. த சாதாரணதரக் கல்வி மற்றும் உயர் தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வசதிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு மேலதிகமாக பகுதிநேர வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்பட்டு இதற்குத் தேவையான பிரத்தியேகமாக பகுதி நேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் வைத்தியராகவோ அல்லது பொறியியலாளராகவோ வெளியாக வேண்டும் என்ற நோக்குடனே கல்வி போதிக்கப்படுகின்றன. அதேவேளை ஒரு ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட பிள்ளையாகவும் சமூகத்திற்குத் தேவையான பிள்ளையாகவும் உருவாக வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த சிறுவர் பராமரிப்பு நிலையமாகும்.

இதனை ஆரம்பிப்பதற்கான முக்கிய காரணம், 2015 ஆம் ஆண்டு அக்குறணை அஸ்னா பள்ளிவாசலில் சமூகப் பணியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மௌலவி அஹமட் முஸம்மிலும் மௌலவி ரம்சான் ஹாசிமி அவர்களுமேயாவர். நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாகக் கூறி இரு பிள்ளைகள் இந்த அமைப்பிடம் முதன் முதலில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இந்த பிள்ளைகளை கையளித்த போதுதான் கட்டாயமாக முஸ்லிம் சமூகத்திற்கு சிறுவர் பராமரிப்பு நிலையம் அவசியம் என உணரப்பட்டது. இந்த பராமரிப்பை நிலையத்தை ஆரம்பிப்பதற்காக மாவில்மடையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான எம். எப். எம். நயீம் மற்றும்; மௌலவி சமீம் அவர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அந்த வகையில் அவர்களுடைய ஒத்துழைப்புடன் த காடியன் என்ற நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைவராக மௌலவி என். எம். எம். ரிபாஸ், உப தலைவராக ஏ. எஸ். எம். ரிஸ்வி, பொதுச்செயலாளராக எம். இஸ்ட். எம். ஸம்ரீன், உதவி பொதுச் செயலாளர் மௌலவி எச். எம். சமீம் பொருளாளராக அல்ஹாஜ் எம். எப். எம். நயீம் ஆகியோர்களுடன் செயற்குழு உறுப்பினர்களாக ஏ. சி. எம். நிஜாம்,எச். எம். பாஹிம், மௌலவி புவாட் (உமைதி)யுடன் போசகர்களாக அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி முஸம்மில் அஹமட், கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எச். உமர் தீன் ஆகியவர்களுடைய வழிகாட்டலுடன் எம். எம். எம். இஷ்ஷாக்,

அல்ஹாஜ் தாஸ் முஹமட், வைத்திய அதிகாரி எம். ஜே. எம். இம்ரான் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் இணைப்பாளராக மௌலவி ட்ப்ளியு ஜீ. ஏ, ஏ. ரம்ஸான், ஏ. எச். எம். அப்துல் கனி ஆகிய முக்கிய பிரமுகர்கள் இடம்பெறுகின்றனர்.

இந்த அமைப்பை ஆரம்பிக்கும் வகையில் எம். எப் எம் நயீம் மற்றும் மௌலவி சமீம் தலைமையில் இவ்வமைப்பின் முக்கியஸ்தர்கள் மத்திய நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைதிணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது குறிப்பாக ஏனைய சமூகங்களில் வாழும் பிள்ளைகளைப் பராமரிக்க சிறுவர் நிலையங்கள் போதுமானளவு உள்ளன. ஆனால் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இல்லை. எவ்வாறு சரி ஒன்றையாவது உருவாக்கும்படி ஆலோசனை வழங்கினர். அதுமட்டுமல்ல அவ்வதிகாரி, முஸ்லிம் பள்ளிகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் வேண்டியளவு உள்ளன. ஆனால் சிறுவர் பாராமரிப்பு நிலையம் ஒன்று முஸ்லிம் சமூகத்தில் இல்லை என்பதை எடுத்துக் கூறினார். சிறுவர் நிலையம் ஒன்றை கட்டாயமாக உருவாக்குமாறும் எமக்கு ஆலோசனை வழங்கினார்.



இதற்கான உதவிகளைச் செய்து தருவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.இதன் அடிப்படையில் இக்குழுவினர் பிரதேச செயலகத்திற்கு சென்றனர். அவர்கள் அதற்கான ஆவணங்கள் சமர்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். எனினும் அவர்கள் இது ஆரம்பிப்பது என்பது விளையாட்டல்ல என்றும், சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று வருமாறும் கூறினர். மத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தினர் மனமுவந்து அனுமதியை தந்துதவினர். அநாதாரவான முஸ்லிம் சிறுவர் ஒருவரை சேர்ப்பதற்கான பொருத்தமான இடம் ஒன்று இருக்கவில்லை,என்பதால்தான் அந்த அதிகாரிகள் இதற்கு அனுமதியளித்தனர்.முஸ்லிம் சிறுவர் ஒருவரை எங்கு சேர்ப்பது என்ற பிரச்சினை அக்காலத்தில் இருந்தது. தற்போது இந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் மூலம் அவர்களிடமிருந்த பெரும்பாரமும் குறைந்துள்ளது.








மேலும் முஸ்லிம் சமூகத்தின் தேவையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மிகவும் துரித கதியில் பதிவு செய்து ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையம் என்றால் இதுவாகத்தானிருக்கும்.

மிகத் துரித கதியில் வளர்ச்சியடைந்து மிகச் சிறந்த முறையில் செயற்படும் நிலையமும் இதுவே.இது ஆரம்பிக்கப் பட்டதால்,தெருக்களிலும்,வீடுகளிலும் அநாதரவாகவும் சுற்றித் திரிந்து கொண்டிருந்த பிள்ளைகள் இன்று கல்வி, ஒழுக்கம் மார்க்கம் ரீதியான முறையில் வளர்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையம் 2015 ஆம் ஆண்டு முதல் முதலாக 03 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 20 பிள்ளைகள் வரை இங்கு உள்ளனர்.



இந்த 20 பிள்ளைகளும் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றனர். அவர்களுக்காக பொல்கொல்ல திறந்த பல்கலைக் கழகத்தில் ஆங்கில பேச்சு மொழி, தொழில் நுட்பக் கல்வி போன்ற பாடங்களையும் கற்றுக் கொள்ள வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தின் மூலம் வெளியாகும் ஒருவருக்கு, எதிர்காலத்தில் காணி வாங்கி வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து திருமணம் முடித்து கொடுப்பதற்கான திட்டங்களும் உள்ளன. இதற்கான நிதி உதவிகள் பள்ளிவாசல்கள் மூலமாகவும் தனியார் மூலமாகவும் அன்பளிப்பு மூலமாகவும் அரச நிதி உதவியிலும் பெறப்படுகிறது. இனம், மதம், மொழி என்று பார்க்காமல் சகல சமூகத்தைச் சார்ந்த மக்களும் இந்நிலையத்துக்கு உதவி செய்து வருகின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் வழங்கும் ஸகாத் நிதியில் கணிசமானளவு ஒரு தொகை இந்நிறுவனத்திற்கு கிடைக்கின்றது.

இந்நிலையம் உருவாவதற்கு மத்திய மாகாணத்திலுள்ள சகல பள்ளிவாசல்களும் உதவி செய்துள்ளன.இந்நிலையத்துக்கு காணி வாங்குவதற்கும் கட்டிட வசதிகள் நிர்மாணிப்பதற்கும் முஸ்லிம் சமூகத்தினர் பாரிய பங்களிப்புச் செய்துள்ளனர். சிறுவர் பராமரிப்பு நிலையம் என்பது தம் வீட்டுப் பிள்ளைகளைப் பார்ப்பதை விடவும் அதிகளவு கவனம் செலுத்தி பராமரிக்கப்பட வேண்டிய இடமாகும். இந்த நிலையத்தின் மாதாந்த மொத்த செலவு 435,000 ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மாதாந்தம் நன்கொடையாக ரூபாய் 112000 வரவுகள் கிடைக்கின்றன. இன்னும் ரூபாய் 323,500 தேவை இருக்கிறது. எனவே எதிர்கால நடவடிக்கைகளுக்கு போதிய அளவில் நிதி இல்லாத காரணத்தினால் இயன்றளவு தாங்களால் முடியுமான நிதி உதவிகளை ஸகாத் மற்றும் ஸதகா நன்கொடையில் இருந்து இந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு வழங்குவதன் மூலமாக புனித ரமழானில் அதிகளவு நன்மையை சம்பாதித்துக் கொள்ள முடியுமாகும்.



இத்தகைய அநாதைப் பிள்ளைகள், பராமரிப்புக் குறைந்த, கைவிடப்பட்ட சிறார்கள் ஸகாத்தின் பல பிரிவுகளுக்கு தகுதியானவர்கள் (மிஸ்கின், பக்கீர் பங்கு) எனவே இவர்களுக்காக வழங்கப்படும் ஸகாத் மற்றும் ஸதகா நிதிகள் கல்வி ஆன்மிகம் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படும் என்பதை உறுதியுடன் இந்த நிலையத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அநாதையை பொறுப்பேற்பவனும் நானும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என நபி (ஸல்) அவர்கள் தனது நடு விரலையும் சுட்டு விரலையும் இணைத்துக் காட்டிக் கூறினார்கள். இந்த நபிமொழிக்கு ஏற்ப நாம் செயற்படுவோம். திகன சுற்று வட்டாரத்திலுள்ள முஸ்லிம் கிராம மக்கள், அஸ்னா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் ஒருவர் த காடியனுக்கு அருகாமையிலுள்ள இடத்தில் ஒன்றரை ஏக்கர் காணி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.



அத்தோடு மற்றுமொருவர் மாத்தளையில் 126 பேச்சஸ் காணியை இந் நிறுவன வளர்ச்சிக்காக அன்பளிப்புச் செய்துள்ளார். தற்போது 45 பிள்ளைகளுக்கான இடவசதிகள் உள்ளன. இங்கு கடமையாற்றுவதற்காக ஏழு சேவையளர்கள் உள்ளார்கள். இன்னும் பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பிள்ளைகளின் வயதுக்கு ஏற்ப விடுதி வசதிகள் அவசியமாக தேவைப்படுகின்றன.அதே போன்று சிறுமிகளுக்கென பிரத்தியேகமாக ஒரு விடுதி மிக அவரச அவசியமாக தேவைப்படுகிறது. நீதி மன்றம் அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்தினால் ஒப்படைக்கப்படும் சிறுமிகளுக்கு ஒரு பராமரிப்பு நிலையம் இல்லை. அதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்துமாறு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினர்.

மீளவும் ஒரு வேண்டுகோள் முன் வைத்துள்ளனர். எனவே அதனை உருவாக்குவதற்கான முயற்சி முன்னெடுக்கப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ரமழான் காலத்தில் உதவிகள் வழங்கப்படுமானால், இதுவொரு பெரிய உதவியாக அமையும் என இந்நிறுவனத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**The Guardian**
**child Development center**
Bank of Ceylon
Madavala Branch - 81571720

இக்பால் அலி...





முல்லைத்தீவில்

# சிறுபோக நெல் விதைப்பினை விரைவாக நிறைவு செய்ய கோரல்

முல்லைத்தீவு குறுாப் நிருபர்

விவசாயிகள் சிறுபோக நெல் விதைப்பினை விரைவாக நிறைவு செய்ய வேண்டும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது குளங்களில் இருந்து வெப்பம் காரணமாக நீர் ஆவியாதல் அதிகரித்து வருகின்றது. கூட்டங்களில் தீர்மானிக்கப்படுகின்ற படியே வேகமாக விதைப்புகளில் ஈடுபடுங்கள். சிறுபோகத்தில் பொது பங்குகள் இல்லை. விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையில் கூடுதலாக ஈடுபட வேண்டும். வவுனிக்குளத்தினைப் பொறுத்த வரையில் தற்போது நீர் மட்டம் 22 அடியாக காணப்படுகின்றது.



சிறுபோக நெற்செய்கை நடைபெறுகின்ற குளங்களில் விவசாயிகள் விரைவாக விதைப்புகளை நிறைவு செய்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்சிறுபோக நெற்செய்கையுடன் உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் கூடுதலான முக்கியத்துவம் அழிக்கப்படுகின்றது.

உப உணவுப் பயிர்ச் செய்கைக்கான விதைகளை கிளிநொச்சியிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவிக்கப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் விதை நெல்லிற்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னாருக்கு கடத்தி வரப்பட்ட 1989 கிலோ மஞ்சள்



(மன்னார் குறுாப் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரிற்கு கடத்தி வரப்பட்ட 1989 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மூடைகளுடன் மன்னாரைச் சேர்ந்த 5 நபர்களை கடந்த புதன் கிழமை(14) காலை 7.55 மணியளவில் மூன்றாம் பிட்டி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரிற்கு மஞ்சள் கட்டி மூடைகள் கடத்தப்படுவதாக இலுப்பைக்கடவை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் விரைந்து செயல் பட்ட இலுப்பைக்கடவை பொலிஸார் மூன்றாம் பிட்டி பகுதியில் வைத்து இதனை கைப்பற்றி உள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் 1989 கிலோ கிராம் நிறை கொண்டதோடு, குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட மன்னாரை சேர்ந்த 5 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள், மற்றும் வாகனம் என்பன இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட குறித்த 5 நபர்களும் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் மீட்கப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் மற்றும் வாகனம் என்பன மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளதோடு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 5 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுவருட அடிதடிச்சம்பவங்களில் 15ற்கும் மேற்பட்டோர் காயம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் சித்திரை புதுவருடதினத்தன்று இடம்பெற்ற அடிதடி மற்றும் விபத்துச் சம்பவங்களில் 15ற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக செட்டிகுளம், ஓமந்தை, சிவபுரம் மற்றும் அவிசதப்பிட்டி ஆகிய பகுதிகளில் குறித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. அவற்றில் அடிதடிச்சம்பங்களே அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அனேகமானவை மதுபோதையால் ஏற்பட்டிருந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

சித்திரை புத்தாண்டு தினத்தன்று யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் முருகன் வள்ளி தெய்வானை சமேதராக வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார். ஏராளமான பக்த அடியார்கள் விசேட பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

# சிறீதரன், சுமந்திரன் எம்.பிக்கள் யாழ். வைத்தியசாலைக்கு விஜயம்

(பரந்தன் குறுாப் நிருபர்)



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயத்தினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர் .

யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா மற்றும் வைத்திய வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடியதோடு வைத்தியசாலையில் தற்போது நிலவும் ஆளணி பற்றாக் குறை, வைத்திய உபகரண குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வைத்தியசாலை விடுதிகளையும்நேரில் சென்று பார்வையிட்டனர்.

# வட மாகாணத்தில் 17ஆம் திகதி வரை மழை

கோப்பாய் குறுாப் நிருபர்



வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வரை மழை வீழ்ச்சி கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு மாகாணத்தில் பொதுவாக காலை வேளைகளில் வெப்பமான காலநிலை நிலவுகின்றது.

இலங்கையின் வளிமண்டலத்தின் கீழ் காற்றழுத்த தாழ்வு நிலை காணப்படுவதால் மாலை நேரங்களில் இடி அல்லது இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி தொடர்ச்சியாக கிடைக்கப் பெற வாய்ப்புள்ளது.

இடி மின்னல் ஏற்படும்போது மக்கள் பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்றுவதோடு மற்றவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

இக்காலப் பகுதியில் பெய்யும் மழையினை மேற்காவுகை மழை அல்லது வெப்பச் சரணமழை என அழைப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காளிகோவிலடி பாலத்தில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் பலி!



புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் காளிகோவிலடியில் அமையப்பெற்ற பாலம் திருத்தப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 14.04.21 அன்று இரவு புதிதாக அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பாலத்தில் வேகமாக சென்ற உந்துருளி விபத்துக்குள்ளாகியதில் 37 வயது குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். அத்துடன் அதில் பயணித்த மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதில் பயணித்த திருகோணமலை திரியாய் 06 ஆம் வட்டாரம் கட்டுகுளத்தினை பிறப்பிடமாகவும் மூங்கிலாறு வடக்கு உடையார் கட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட 3 பிள்ளைகளின் தந்தையான அழகானந்தன் காந்தன் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கு கொரோனா

யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் , மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார் .

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 145 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன அதில் 25 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தை வர்த்தகர்கள் , பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 21 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது .

அதேவேளை வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இருவருக்கும் (இருவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்) கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், (சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்) மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்குமாக 25 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது " என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் , மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார் .


# முல்லைத்தீவு மாந்தை கிழக்கிற்கான இலங்கை போக்குவரத்து பஸ் சேவை

முல்லைத்தீவு குறுாப் நிருபர்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிற்கான இலங்கை போக்குவரத்து பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக மாந்தை கிழக்கிற்கு நடைபெற்று வந்த ஒரேயொரு இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக மாந்தை கிழக்கிற்குப் பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். தற்போது அப்பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணுக்காய் சென்று பின்பு மாந்தை கிழக்கு பாண்டியன்குளத்திற்கு செல்லும் பஸ் பிற்பகலில் அதே வழித்தடத்தில் யாழ்ப்பாணத்தினை நோக்கிப் பயணிக்கும். இதேவேளை மாந்தை கிழக்கிற்கான தனியார் பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை என பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. காலையில் வருகின்ற தனியார் பஸ் ஒன்று மாலையில் வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. தனிப் பிரதேச செயலாளர் பிரிவான மாந்தை கிழக்கிற்கான பஸ் சேவைகள் இடம் பெறாதது தொடர்பாக மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் தீர்வு காணப்படாத பிரச்சினைகளாக காணப்படுகின்றன. இதன் காரணமாக மாந்தை கிழக்கில் உள்ள மாணவர்கள், பொது மக்கள், உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

# சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணனிக்கூடம் உடைத்து திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணனிக்கூடம் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. குறித்த திருட்டு சம்பவம் 13/04/2021 செவ்வாய்க்கிழமை மதியத்திற்கு பின்னர் இடம்பெற்றிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் போது கணனிகள், பல்லூடக எறிகாட்டி மற்றும் அச்சுப்பொறிகள் உள்ளடங்கிய பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. அத்துடன் மேலும் சில பொருட்கள் கொண்டு செல்லத் தயாராக பொதி செய்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 8 வயது சிறுவன் செலுத்திய மோட்டார் சைக்கிளில் மோதி 2 வயது தங்கை பலி

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரிமட்டுவில் சந்திரபுரம் பகுதியில் 14/04/2021 புதன்கிழமை புதுவருட தினத்தன்று காலை வேளையில் எட்டு வயதுச் சிறுவன் இயக்கிய மோட்டார் சைக்கிள் அவரது ஒன்றரை வயது தங்கையின் உயிரைப் பறித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

# மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்

(மன்னார் குறுாப் நிருபர்)

இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (15) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,,.

இந்திய மீனவர்கள் அத்து மீறி நுழைந்து இலங்கை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். போர்க் காலத்தின் போது எமது மீனவர்கள் குறுகிய கடல் பரப்பில் கடற் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

எனவே இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கடற்தொழில் அமைச்சர் சிந்திக்க வேண்டும்.

# சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்பு!

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரும் குடும்பஸ்தருமான ஒருவர் தவறான முடிவினால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தேராவில் பகுதியினை சேர்ந்த 52 அகவையுடைய ரங்கசாமி ரவிசங்கர் என்ற 4பிள்ளைகளின் தந்தையே அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்வருவதுடன் மரணவிசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் சஉடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)

2020 மார்ச் 06ஆம் திகதி 2166 இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சையின் பாடத்திட்டங்கள் திருத்தப்பட்டு உள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2020 மார்ச் 05ஆம் திகதி 2218 இலக்க வர்த்தமானியைப் பார்வையிடவும்.

**பீ. சனத் பூஜித**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**5/5/2/AD/2021**
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்லை.**

2021 ஏப்ரல் 16ஆம் திகதி

# அடகுத் தங்க ஆபரண ஏலவிற்பனை

வரையறுக்கப்பட்ட பூஜாபிட்டிய பல நோக்குக் கூட்டுவுச் சங்கத்தின்

- அங்கும்புர
- பூஜாபிட்டிய
- முல்லேகம
- உடகம

எனும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2020-01-31ஆம் திகதி உட்பட அன்றைய தினம் முதல் அடகு வைக்கப்பட்டு 2021-05-08ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2021-05-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 3.00 மணி வரை பூஜாப்பிட்டிய சங்க அலுவலக வளவில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்.**

**வ/ப பூஜாபிட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பூஜாபிட்டிய.**

**2021-04-05.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**108**
**நிஸான் கார்**
விற்பனைக்கு

18-1136 Nissan sunny, 1988 car, ஆகக் கூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542 958
028285

**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP AAO-9891 Bajaj, 2014, WP QN-0371 Bajaj, 2007, WP ABD-2753 Bajaj, 2015, threewheel, ஆகக் கூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 07112 1 0 810
028303

WP AAY-9151 Bajaj, 2015, WP AAA-3580 Bajaj, 2012, three wheel ஆகக் கூடிய விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 07 11210810
028288

WP BBT-1142 Yamah FZ, 2014 motor-cycle, ஆகக் கூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 21081 0
028290

WP YD-6578 Bajaj, 2010, WP AAT-1636 Bajaj, 2014, WP YK-4836 Bajaj, 2011, WP AAR-1957 Bajaj, 2014 three-wheel, ஆகக் கூடிய விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 071 1 2 10 810
028292

கம்பனி பெருந்தோட்ட அபிவிருத்தி தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் சார்ந்த பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழிற் சாலைகள் நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்**

# விலைமனு அறிவித்தல்

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சிதைவுற்ற பதார்த்தங்களின் விற்பனை

எமது நிறுவனத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பன்வரும் உபகரணங்கள் மற்றும் சிதைவுற்ற பதார்த்தங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிட்ட விலைமனுக்கள் கோரப்படுவதுடன் அவற்றை 2021.04.19 முதல் 2021.04.29 வரை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இந்நிறுவனத்தில் சமுகமளித்து நேரடியாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

- அலுவலக உபகரணங்கள் வளிச்சீராக்கி இயந்திரங்கள் செவிப்புல கட்டிட உபகரணங்கள்
- பாவனையிலிருந்து அகற்றப்பட்ட அச்சு இயந்திரங்கள் மோட்டார்கள்
- கலறறி அகற்றப்பட்ட கதவுகள், யன்னல்கள், கதவு நிலைகள் மற்றும் சிதைவுற்ற பதார்த்தங்கள்

மீளளிக்கப்படும் 5000/- ரூபா விற்கான வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமாக 500/- ரூபாவிற்கான தொகையை இந்நிறுவனத்தின் நிதிப்பிரிவில் காசாகச் செலுத்தி நிபந்தனைகளுடன் கூடிய விலை மனுப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் விலைமனுக்கள் 2021.04.30 அன்று பி. ப. 2.00 இற்கு முன்னர் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கப்படல் அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் முடியும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பண்டங்களின் விற்பனை' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

***விசாரணைகள்:*** **திரு. ஜனித பிரனாந்து 077 3396700**

**தலைவர் பெறுகைக்குழு,**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்**
**எம். டீ. எச். ஜயவர்தன மாவத்தை, அதுருகிரிய.**
**தொ.பே. இல. 011 2770232**
**தொலை நகல்:011 2798775**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு**
**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)**

ESCAMP

**IFB No.: LK-ESCAMP-PMU-144720-CW-RFB**

## நுவரெலியா (P6) இலங்கை வனவியல் நிறுவகத்தில் (SLFI) புதிய நிருவாக கட்டிட கட்டுமானம் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்கான தங்குமிட வசதி மற்றும் கேட்போர்கூட கட்டிட புதுப்பித்தல்கள்

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை நுவரெலியா இலங்கை வனவியல் நிறுவன உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு விரிவாக்கல் ஆகியவற்றின் ஒப்பந்தத்தின் கீழான பணக் கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது.

2. கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறு வன பரிபாலன திணைக்களத்திற்காக நுவரெலியாவிலுள்ள இலங்கை வனவியல் நிறுவகத்தின் உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு விரிவாக்கல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சூழல் தொகுதி மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சின் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

   நிர்மாணக் காலப்பகுதியானது அண்ணளவாக 300 நாட்களாகும் (10 மாதங்கள்).

| விலைமனு இலக்கம் | விலைமனுப் பெயர் | பணியின் நோக்கம் | பெசேவ மற்றும் அவசர நிகழ்வுகள் நீங்கலாக பொறியிய லாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | விலை மனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| LK-ESCAMP – PMU – 144720 – CW RFB | நுவரெலியா (P6) இலங்கை வனவியல் நிறுவகத்தில் (SLFI) புதிய நிருவாக கட்டிட கட்டுமானம் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்கான தங்குமிட வசதி மற்றும் கேட்போர்கூட கட்டிட புதுப்பித்தல்கள் | வரைபடங்களில் விபரிக்கப்பட்டவாறான பொறிமுறை மற்றும் மின்னியல் வேலைகள் விபரக் குறிப்புக்கள், சூழல் முகாமைத்துவ திட்டம் மற்றும் அளவைகள் பட்டியல் அடங்கலாக புதிய நிருவாக கட்டிட கட்டுமானம் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்கான தங்குமிட வசதி மற்றும் கேட்போர்கூட கட்டிட புதுப்பித்தல்கள் | 272 | 2,720,000.00 |

3. விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
   - ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப் படாதவராகவும் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரரானவர் முன்பு ICTAD என அழைக்கப்பட்டதும் தற்போதய CIDA உடன் சி-3 அல்லது மேற்பட்ட தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கட்டிடங்கள் நிர்மாணத்தில் விஷேடத்துவ பதிவையும் விலைமனுவை சமர்ப்பிக்கும் போது அவ்வாறான பதிவிற்கான அத்தாட்சியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 430 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது செயற்றிட்ட திட்டவட்டமான கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகையானது 72 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருத்தல் ஆகாது.
   - உரித்தான விலைமனுக் கோரல் ஆவணங்களில் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு விலைமனுதாரர்கள் தேவைப்படும் நிதியிடல், தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக, சுகாதார மற்றும் பத்திரத்தன்மை முகாமைத்துவ ஆற்றல்களை கொண்டுள்ளவர்களென உறுதிப்படுத்துமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
   - கடந்த 5 வருட காலப்பகுதியில் நிகரான செயற்றிட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆவணச் சான்று முன்வைக்கப்படல் வேண்டும். ஒப்பந்தகாலப் பகுதியின் ஆரம்ப நிலையிலேயே சரியான காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகளின் தரம் கணிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அவர்களின் விபரங்களை மதிப்பீட்டிற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.
   - உலக வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியங்கள் முழுவதுமாக 2022 நடுப்பகுதியில் உபயோகப்படுத்தப்படல் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். எனவே, மதிப்பீட்டு குழுவானது மிகச்சிறந்த அனுசரணையான முன்வைப்பை பரிந்துரை செய்யக்கூடியதான உறுதி செய்யப்படாத வேலைத் திட்டம், தொழிலாளர்களை நிலையமர்த்தல், காசுப் பாய்ச்சல் எதிர்வு கூறல் இன்னும் பலவற்றின் விபரங்களை அவர்களின் முன்வைப்புக்களுக்கு ஆதரவாக வழங்குவதற்காக விலைமனுதாரர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்/ மதியுரை வழங்கப்படுகின்றனர்.
   - பொருத்தமான பங்காளர்களையும் உசாத்துணை வழியாக மிகச்சிறந்த போட்டிரீதியிலான மற்றும் மிகச்சிறந்த வினைத்திறனையுடைய விலைமனுதாரரை கண்டறிவதற்காக பெறுகைக் குழுவானது இறுதியான மதிப்பீட்டுக் கட்டத்தில் ஆகக் குறைந்த விலைமனுக்களைச் சமர்ப்பித்த மூன்று விலைமனுதாரர்களுக்கானதொரு வியாபாரிகளுக்கான பரீட்சித்தல் (Vendor Inspection) ஐ நடாத்தும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2021 ஏப்ரல் 19ஆம் திகதியிலிருந்து 2021 மே 07ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரண வேலை நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக் கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். (தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: 0112888426/ 0112888427)

5. 2021 ஏப்ரல் 19ஆம் திகதியிலிருந்து 2021 மே 07ஆம் திகதிவரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 45,000 ரூபாவை ஒவ்வொரு விலைமனுவிற்கும் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமையானது சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட கணக்காளருக்கு ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு அவையிரண்டும் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் நிர்மாண தலைப்பு ஆகியன தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் 2021 மே 11ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில், அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே அதே இடத்தில் திறக்கப்படும்.

7. தளவிஜயம் மற்றும் பரீட்சித்தல் ஆகியன 2021 ஏப்ரல் 29ஆம் திகதியன்று மு.ப.10 மணிக்கு நுவரெலியா, மூன் சமவெளியிலுள்ள (Moon Plains) இலங்கை வனபரிபாலன நிறுவகத்தில் நடைபெறும். (தொலைபேசி: 052-2235340) விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2021 ஏப்ரல் 30ஆம் திகதியன்று மு.ப.10 மணிக்கு பத்தரமுல்ல, 'சம்பத்பாய' இடப்பரப்பின் ESCAMP இன் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் நடைபெறும்.

8. விலைமனுக்கள் 2021 செப்டம்பர் 30ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான ''விலைமனுப் பிணையொன்றுடன்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது மேலேயுள்ள அட்டவணையில் விலைமனுக் கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக இருப்பதுடன் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2021 ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

10. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 படிவத்தை (1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்) வழங்கல் வேண்டும் (**http://www.drc.gov.lk/**)

11. தளவிஜயங்கள் தொடர்பான ஆகு செலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலாக விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஆகு செலவுகள் மற்றும் செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பேற்கமாட்டார்.

12. பெற்றுக் கொண்ட எந்தவொரு விலைமனுவையும் ஒன்றில் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான முழு உரிமையையும் செயற்றிட்ட பெறுகைக் குழுவானது கொண்டுள்ளதுடன் இது தொடர்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக்குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**''சம்பத்பாய'', இல.: 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல.: 0112888426/ 0112888427**
**www.escamp.lk**
**திகதி: 2021ஏப்ரல் 16ஆம் திகதி.**

**சுற்றுலா அமைச்சு**

# தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம்

**பேராதனை**

## நிலச் சீராக்க அபிவிருத்தி உதவியாளர் பயிற்சி கற்கை நெறி N.V.Q-4 மட்டம்

பேராதனை - தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்காக ஆண் / பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தேவையான தகைமைகள் | : | க.பொ.த. சா/த பரீட்சையில் 06 (ஆறு) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| வயது | : | 18 மற்றும் 35 வயதிற்கிடைப்பட்டிருத்தல் வேண்டும். |
| கற்கை நெறிக் காலம் | : | முழுமையான கற்கை நெறிக் காலம் 10 மாதங்கள் |
| | : | முதல் 04 மாதங்கள் - மலர்ச் செய்கை மற்றும் பூங்கா அலங்கார பாடசாலையில் உடல் ரீதியான மற்றும் செயன்முறைப் பரீட்சை (முழு நேரம்)<br>இரண்டாவது 06 மாதங்கள் - பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் அல்லது விடயத் துறைக்கு இயைபான நிறுவனமொன்றில் உள்ளகப் பயிற்சி (முழு நேரம்) |
| மொழி ஊடகம் | : | சிங்களம் |
| அறவீடுகள் | : | இலவசம் |

கற்கை நெறியின் இறுதியில் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சையின் பின் சித்தியடையும் பயிலுநர்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் NVQ-4 மட்டச் சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் A4 அளவான தாளில் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு 2021-05-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**உதவிப் பணிப்பாளர்,**
**மலர்ச்செய்கை மற்றும் பூங்கா அலங்காரப் பாடசாலை,**
**அரச தாவரவியல் பூங்கா,**
**பேராதனை**

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் இந்த தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். 081-2385893

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம்,**
**பேராதனை.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

நிலச் சீராக்க அபிவிருத்தி உதவியாளர் கற்கை நெறிக்கான (**NVQ-4** மட்டம்) விண்ணப்பப் படிவம் - 2021

1. பெயர் : ..........
2. முகவரி : ..........
3. பிறந்த திகதி : ..........
4. தேசிய அடையாள அட்டை இல. : ..........
5. வயது : ..........
6. தொலைபேசி இலக்கம் : ..........
7. கல்வி தகைமை: க.பொ.த. (சா/த) : ..........
8. ஏனைய கல்வித் தகைமைகள் : ..........

மேலே தரப்பட்டுள்ள விடங்கள் உண்மையானவை என சான்று பகர்கின்றேன்.

திகதி: ..........

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT App Store Google play Windows Store

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE



தமிழ், சிங்களப் புத்தாண்டையொட்டி உற்றார், உறவினர்கள் மற்றும் அயலவர்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் மற்றும் குடும்பத்தினரும் கால்ட்டன் இல்லத்தில் புத்தாண்டை கொண்டாடினார்கள். இதில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, யோஷித்த ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர்.





யாழ். கோண்டாவில் ஐயப்பன் தேவஸ்தானத்தில் ஈழத்து ஐயப்ப குருமார் ஒன்றிய அங்குரார்ப்பண விழா அண்மையில் நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர், வேலன் சுவாமிகள், தலைவர் ஹரிகர சுத குருக்கள் மேடையில் அமர்ந்து இருப்பதனையும் பிரதம அதிதியான பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மாவுக்கு "சிவாகம ஞானவாரி" எனும் சிறப்புப்பட்டம் வழங்கி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

# தமிழ், சிங்கள புத்தாண்டு ஒன்றுகூடல்









2021 தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி சிலுமின, தினகரன் பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களினதும் படப்பிடிப்பாளர் பிரிவினதும் ஒன்றுகூடல் ஒன்று நேற்று லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிலுமின பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் இடம்பெற்றது. லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியபீடப் பணிப்பாளர் தர்மசிறி காரியவசத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

(படங்கள்: நிசங்க த சில்வா)





புனித நோன்பை முன்னிட்டு வறுமைக் கோட்டிற்குள் உள்ள தேவையுடைய சுமார் 150 குடும்பங்களுக்கு ஸகாத் உலர் உணவுப் பொருட்களை கனேடிய சிறிலங்கன் முஸ்லிம் பெண்கள் சம்மேளனம் இலங்கையில் உள்ள இளம் மாதர் முஸ்லிம் சம்மேளனத்துடன் இணைந்து வழங்கியுள்ளது. இளம் மாதர் முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் நேற்று தெமட்டகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலயத்தில் வைத்து இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)



பர்ல் ஹோபி கிராஃப்ட் நிறுவனத்தின் 13 வது ஆண்டு விழா மற்றும் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு எம்.டி. குணசேன லிலியன் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பயிற்சியை முடித்த மாணவிக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசிம் உமர் விருது மற்றும் சான்றிதழை வழங்கினார். கௌரவ அதிதியாக கலந்து சிறப்பித்த நிறுவனத்தின் நிதி கட்டுப்பாட்டாளர் சதுரிகா லியனாரச்சி, நிறுவனத்தின் தலைவர் திருமதி ரீசா பவாஸ்தீன், கல்விப் பணிப்பாளர் எம்.எம் பவாஸ்தீன் ஆகியோர் இவற்றை இணைந்து வழங்கினர். (படம் : ருசைக் பாரூக்)

## கொழும்பு துறைமுக பொருளாதார சட்டமூலத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல்

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை எதிர்த்து நேற்று (வியாழக்கிழமை) உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது பொது வாக்கெடுப்பு மூலம் குறிப்பிட்ட சட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர்கள் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

### கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தின் அருங்காட்சியக நூலகத்திற்கு தீ அணைப்பு முறைமையை வழங்கல் மற்றும் நிறுவுதல்

**Contract No.: DNM/DEV/2019/143**

1. தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியுஸ் ஆகிய பத்திரிகைகளில் விலைமனுக்கள் தொடர்பான அழைப்பிற்கான மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக 2021 மார்ச் 26ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.
2. பின்வரும் மாற்றங்கள் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்காக விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் நேரம் மற்றும் திகதியானது 2021 ஏப்ரல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - **விலைமனுக்களை திறக்கும்/மூடும் நேரமானது 2021 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.**
   - **விலைமனு ஆவணங்களின் பெறும் நேரம் மற்றும் திகதியானது 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையும் பி.ப. 2 மணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**
   - **விலைமனுப்பிணையானது 2021 ஓகஸ்ட் 25 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.**
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பிலுள்ள அனைத்து ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-07, சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியக திணைக்களம், பணிப்பாளர்நாயகத்திடமிருந்து பெற்று 2021ஏப்ரல் 27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய அருங்காட்சியக திணைக்களம்,**
**இல. 53, சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011-269-5366**
**தொலைநகல்: 011-269-2092**



திகதி 12.04.2021 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4455
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,879,630.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 9 8 5 7 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,984,393.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2750
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,369,460.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 04 24 42 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,218,426.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 814
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,469,640.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 128,551,962.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து P சுப்பர் இலக்கம் 17 வெற்றி இலக்கங்கள் 01 36 45 75

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 492
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,239,440.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 10 16 31 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,025,201.20

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1675
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,906,180.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 09 16 68 95
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,999,152.30

12.04.2021- தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 762,422
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 30,864,350.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 29

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராலயம் கொழும்பு

## இலவச வீதி நூலகங்களை அமைத்தல்

இலவச வீதி நூலகங்களை அமைப்பதற்காக உள்ளூர் வியாபாரிகளிடமிருந்து விலைமனுக்களை பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராலயம் கோருகின்றது.

எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பணக் கட்டளை/ வங்கி வரைவில் 1,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக பாகிஸ்தான் உயர்ஸ்தானகராலயத்தில் பெயரில் செலுத்திய பின்னர், விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்களை அடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை உயர்ஸ்தானிகத்தில் பெற்றுக் கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021 மே 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று மு.ப. 11 மணிக்கு உயர்ஸ்தானிகராலயத்தை வந்தடைதல் வேண்டும். விலைமனுக்கள் அதே தினத்தில் மு.ப. 11.30 மணிக்கு விலைமனுதாரர்கள்/ அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். பாகிஸ்தான் பெறுகை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சட்டங்களின் பிரகாரம் பாகிஸ்தான் பொது கொள்முதல் ஒழுங்குமுறை ஆணையம் முழுவதுமாக அல்லது பகுதியாக எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ விலைமனுக்களையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையைக் கொண்டுள்ளது.

கீழ் உள்ள இணையதளங்களிலும் இவ் விளம்பரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

a) **www.ppra.org.pk**
b) **www.pakistanhc.lk**

**ஸ்தானிகராலய தலைவர்**
**பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராலயம்,**
**இல.: 42, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு-07.**
**தொலைபேசி: 011-2055681-82**



# மக்கள் வங்கி

## கூட்டிணைந்த வங்கிப் பிரிவு

### 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29வது (ஈ) பிரிவின் கீழான முன்மொழிவு

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29வது (ஈ) பிரிவின் கீழான முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2021.03.26ஆம் திகதி நடத்தப்பட்ட தமது பணிப்பாளர் சபை கூட்டத்தில் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஈ) பிரிவின் கீழ் பின்வரும் முன்மொழிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவு இலக்கம் PV7580 கொண்ட மற்றும் பொரலஸ்கமவ, பெபிலியான, கொழும்பு வீதி. 362ஆம் இலக்கமுடைய இடத்தில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதுமான கம்பெனியான தயா எபரல் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிட்டட் என்ற கம்பெனி கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ. எஸ். மஹாவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 செப்டம்பர் 20ஆம் திகதியிட்ட இலக்கம் 961 கொண்ட ஈட்டு பறி கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் எஸ்.டீ.என். பிரேமதாச அவர்களால் எழுதி சான்றுபடுத்தப்பட்ட 2017 பெப்ரவரி 21ஆம் திகதியிட்ட இலக்கம் 2687 கொண்ட ஈட்டு மறி என்பவற்றின் மீது அறவிடுவதற்குள்ள செலுத்தீடுகளைச் செலுத்தத் தவறியுள்ளதால் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் நாநூற்று இருபதாயிரத்து எண்நூற்று இருபத்தொன்பது சதம் இருபத்தாறு (ஐ.அ.டொ.1,420,829.26) பணத் தொகையும் அதன் ஈட்டு முறி மீது வட்டியும் மக்கள் வங்கிக்கு அறவிடுவதற்கு நிலுவையாகவும் கிடைக்க வேண்டியதாகவும் உள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் கமலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் நாநூற்று இருபதாயிரத்து எண்நூற்று இருபத்தொன்பது சதம் இருபத்தாறு ஐ.அ. டொ. 1,420,829.26 மேற் குறிப்பிட்ட பணத் தொகையும் 2021 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் விற்பனை திகதி வரை ஐக்கிய அமெரிக்க டொலர் இருநூற்று நாற்பத்து நாலாயிரத்து எழுநூற்று பதினைந்து சதம் எண்பத்தொன்று (ஐ.அ.டொ. 244,715.81) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு எட்டு வீதம் (வரு. 8%) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் இருநூற்று - பத்தாயிரத்து இருநூற்று அறுபத்து எட்டு சதம் நாற்பது (ஐ.அ டொ. 210,268.40) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு ஒன்பது வீதம் (வரு. 9%) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் எண்நூற்று பன்னிரண்டாயிரத்து நாநூற்று தொன்னூற்று நான்கு (ஐ.அ.டொ. 812,494.00) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு எட்டு தசம் ஐந்து பூஜ்யம் வாதம் (வரு. 8.50%) மற்றும் அல்லது மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஓ) பிரிவின் கீழ் அறவிடக்கூடிய கட்டணங்கள் மற்றும் பணத்தொகை என்பவற்றுடன், அதன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை செலுத்தப்பட்டிருந்தால் அதைக் கழித்து - அறவிட்டுக்கொள்வதற்காக கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 செப்டம்பர் 20ஆம் திகதியிட்ட இலக்கம் 961 கொண்ட ஈட்டு முறி மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் எஸ்.டீ.என். பிரேமதாச அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2017 பெப்ரவரி 21ஆம் திகதியிட்ட இலக்கம் 2687 கொண்ட ஈட்டு முறி என்பவற்றின் மூலம் மேற்படி வங்கிக்கு ஈடுவைத்துள்ள மற்றும் இதன் கீழே அட்டவணையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் கொழும்பு 8, பெயார்பீல்ட் பூங்கா இலக்கம் 6 ஏ என்ற இடத்தில் வதியும் அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர் திருவாளர்கள் ஷொக்மன் மற்றும் சமரவிக்கிரம மூலம் விற்பதற்கு இத்தால் முன்மொழிந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாண, கொழும்பு மாவட்டத்தில் மாநகரசபை எல்லைக்குள் டாம் வீதி பிரதேச செயலக பிரிவில் புதுக்கடை கிராம உத்தியோகத்தர் பிரிவில் புதுக்கடை கிழக்கில் அமைந்துள்ள மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 275 கொண்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எம்.சி.எல்.சி.பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2006.11.05ஆம் திகதியிட்ட இலக்கம் 57-2006 கொண்ட மாதிரிப்படத்தில் சித்தரிக்கப்பட்ட பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்ட பிரித்து ஒதுக்கப்பட்ட காணிப் பகுதிக்கு எல்லைகள் **வடக்கிற்கு**: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆதனங்களும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை வரி மதிப்பீட்டு இலக்கம் 395 மற்றும் 399 கொண்ட வளாகங்களும் **கிழக்கிற்கு:** ஸ்ரீ சங்கராஜ மாவத்தையும் **தெற்கிற்கு** - மீரானியா வீதியும் **மேற்கிற்கு:** மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 269 என்ற வளாகம் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள இலக்கம் 57-2006 கொண்ட மேற்படி மாதிரிப்படத்திற்கு அமைவாக ஏக்கர் ஒன்று, றூட் ஒன்று, பர்ச்சஸ் பன்னிரண்டு தசம் எட்டு நான்கு (ஏ.1, றூ.1, 1.12.84) அளவைக் கொண்டுள்ள முழு காணிப்பகுதி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

இலக்கம் 57-2006 கொண்ட மாதிரிப்படத்தில் சித்தரிக்கப்பட்ட லொட் இலக்கம் 3 கீழ்க் குறிப்பிட்ட காணிப் பகுதியின் மறு அளவையாகும்.

மேல் மாகாண, கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வாழைத்தோட்ட தேர்தல் தொகுதி இலக்கம் 18 புதுக்கடை தேர்தல் தொகுதி இலக்கம் 16 இல் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரி மதிப்பீட்டு இலக்கம் 387 மற்றும் மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 275 கொண்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எம்.டி. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.06.25ஆம் திகதியிட்ட இலக்கம் 1742 கொண்ட மாதிரிப்படத்தில் சித்தரிக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்ட பிரித்து ஒதுக்கப்பட்ட காணிப் பகுதிக்கு எல்லைகள் வடக்கிற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஆதனங்களும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை வரி மதிப்பீட்டு இலக்கம் 395 மற்றும் 399 கொண்ட வளாகங்களும் **கிழக்கிற்கு:** ஸ்ரீ சங்கராஜ மாவத்தையும் **தெற்கிற்கு** மீரானியா வீதியும் **மேற்கிற்கு:** மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 269 என்ற வளாகம் மற்றும் பள்ளி வளாகம் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள இலக்கம் 1742 கொண்ட மேற்படி மாதிரிப்படத்திற்கு அமைவாக ஏக்கர் ஒன்று, றூட் ஒன்று, பர்ச்சஸ் பன்னிரண்டு தசம் எட்டு நான்கு (ஏ.1, றூ.1, ப. 12.84) அளவைக் கொண்டுள்ள முழு காணிப் பகுதியாகும்.

மேற் குறிப்பிட்ட இலக்கம் 1742 கொண்ட மாதிரிப்படத்தில் மேற்படி லொட் இலக்கம் 3 கீழக் குறிப்பிட்ட காணிப் பகுதியின் மறு அளவையாகும்.

மேல் மாகாண, கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வாழைத்தோட்ட தேர்தல் தொகுதியில் புதுக்கடை கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரி மதிப்பீட்டு இலக்கம் 387 மற்றும் மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 275 கொண்ட காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எஸ்.ராஜேந்திரா அவர்களால் தயாரிக்கப்பட்ட 1969.03.14ஆம் திகதியிட்ட இலக்கம் 3543 கொண்ட மாதிரிப் படத்தில் சித்தரிக்கப்பட்ட லொட் "D" என அடையாளமிடப்பட்ட பிரித்து ஒதுக்கப்பட்ட முழு காணிப் பகுதிக்கு எல்லைகள் **வடக்கிற்கு:** பிரின்சஸ்கேட் வரி மதிப்பீட்டு இலக்கம் பூங்கா 112 கொண்ட வளாகமும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை வரி மதிப்பீட்டு குறிப்பிடப்பட்ட இலக்கம் 391 மற்றும் 393, **கிழக்கிற்கு:** முன்னர் ஸ்கின்னர்ஸ் வீதி வடக்கு என்ற வகையில் குறிப்பிடப்பட்ட ஸ்ரீ சங்கராஜ மாவத்தையும், **தெற்கிற்கு:** மீரானியா வீதி (பெரி வீதி எனக் குறிப்பிடப்பட்ட) மற்றும் **மேற்கிற்கு:** மீரானியா வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 269 மற்றும் மீரானியா வீதி 263, 98 பிரின்சஸ்கேட் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள இலக்கம் 3543 கொண்ட மேற்படி மாதிரிப்படத்திற்கு அமைவாக ஏக்கர் ஒன்று, றூட் ஒன்று, பர்ச்சஸ் பதினொன்று தசம் ஐந்து ஆறு (ஏ.1, றூ.1, ப.11.56) அளவைக் கொண்டுள்ள முழு காணிப் பகுதியாக இருப்பதோடு இது கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் D39/142இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**பிரதிப்பொது முகாமையாளர் (அறவீடுகள்),**
**மக்கள் வங்கி,**
**அறவீடுகள் பிரிவு, 10வது மாடி,**
**தலைமை அலுவலக கட்டிடம்,**
**இலக்கம் 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 2.**
2021 பெப்ரவரி 05

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk



# வாகன விற்பனை

| டுவெல் | பேர்பஸ் | வருடம் | இடம் |
|---|---|---|---|
| PQ-6912 | டாடா | 2010 | குருநாகல் |

மேலே காணப்படும் வாகனம் எமது இடத்தில் பரிட்சித்து பார்ப்பதுடன் Auction முறையில் விலைக்கு வழங்கப்படும்

குருநாகல் - 0374 943 738

LB FINANCE
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


# அரசாங்க நிறுவனங்களுக்கு 155 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த 155 பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொகு போதாகம தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற இந்நிகழ்வில் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக பட்டம் பெற்று 2019 ஆம் ஆண்டு பட்டதாரி பயிற்சியாளர்களாக உள்வாங்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் சகல அரசு நிறுவனங்களுக்கும் முகாமைத்துவ உதவியாளர்களாக மேற்படி பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# இலங்கை வங்கி

## ஏலவிலைக் கோரலுக்கான அழைப்பு

### இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 30 எண்ணிக்கையிலான 12kVA AMF சிறப்பான சக்தியுள்ள அமைதியான மூன்று கட்ட டீசல் மின் பிறப்பாக்கிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

**கேள்வி இல : BOC/P/PROC/2021/43**

1. இலங்கை வங்கி, "BOC சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கி சார்பாக இலங்கை வங்கியின் தொகுதி பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 30 எண்ணிக்கையிலான 12kVA AMF சிறப்பான சக்தியுள்ள அமைதியான மூன்று கட்ட டீசல் மின் பிறப்பாக்கிகளை விநியோகித்து, வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி மற்றும் பராமரிப்பதற்கு பிரதம உற்பத்தி நிறுவனம் / பெயர் பெற்ற வழங்குநர் / வரைவு பெற்ற உள்நாட்டு முகவர்களிடம் இருந்து நகலுடனான பூரணப்படுத்தப்பட்ட விலைகூறல்களைக் கீழ்க் கண்ட தகைமை உடையவர்களிடமிருந்து கோருகின்றார் :
   - i. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) நிர்மாண ஒப்பந்ததாரர்கள் தேசிய மட்டத்தில் மின் பிறப்பாக்கிகள் பிரிவில் தரம் EM2 அல்லது அதற்கு மேல் பதியப்பட்டிருக்க வேண்டும்.
   - ii. குறிப்பிட்ட வியாபாரப் பிரிவில் கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருத்தல்.
   - iii. ஏலவிலை கூறுபவர் கடந்த மூன்று ஆண்டுகளாக (2018, 2019 மற்றும் 2020) இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 30 எண்ணிக்கையிலான 12kVA AMF அல்லது அதிலும் அதிகளவான AMF சிறப்பான சக்கியுள்ள அமைதியான மூன்று கட்ட டீசல் மின் பிறப்பாக்கிகளை விநியோகித்து, வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி மற்றும் பராமரித்திருக்க வேண்டும்.
   - iv. கடந்த மூன்று வருட காலத்தினுள் வழங்கப்பட்ட வியாபார நாமத்தினை உடைய மின் பிறப்பாக்கிகளை இலங்கையினுள் வழங்கி, பொருத்தி மற்றும் பராமரித்திருக்க வேண்டும்.
2. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய ஏலவிலைக் கூறல்கள் இடம்பெறும்
3. ஏலவிலைக்கூற ஆர்வமுடையவர்கள் மேலதிக விபரங்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, "BOC சதுக்கம்" இல. 01ல் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணிவரை 2021.04.16 ஆம் திகதி முதல் 2021.05.06 ஆம் திகதி வரை இலவசமாகப் பார்வையிடலாம். ((சொத்துக்களும் சேகரிப்பும்) பிரிவிற்கான பிரதான முகாமையாளரை 0112544310 / 0112430268 / 0112204270 எனும் இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொள்ளுங்கள்)
4. ஆங்கில மொழியிலான ஏலவிலை கூறல் / உரிய விபரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விலைக்கோரல் ஆவணத்தொகுதியை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" 14ஆம் தளத்திலுள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ. 12,610/- (ரூ. 11,675/- + ரூ. 935/- (8% VAT உடன்) உடன் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். கொடுப்பனவு முறை பணமாகும்.
5. இலங்கை வங்கி, பிரதான முகாமையாளரிடம் (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பு) பெற்ற ஆவணங்களினூடாக ஏலவிலைக்கூறல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நகற்படுத்தப்பட்ட ஏலவிலைக்கூறல் ஆவணங்கள் ஏலவிலைக்கூறலின்போது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
6. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் பெற்ற ரூபா 675,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்தையாயிரம்) பெறுமதியானதும் 2021.09.03 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான வங்கிப் பிணை முறியாக இணைக்க வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலையானது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. நகலுடன் முத்திரையிடப்பட்ட ஏலவிலைக்கூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கியின் தரைத் தளத்திலுள்ள பெட்டியில் இட வேண்டும்

| | |
|---|---|
| ஏல விலைக்கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2021.05.06 ஆம் திகதி 1430 மணி வரை |
| ஏல விலைக்கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும் | 2021.05.07 ஆம் திகதி 1000 மணி |
| ஏல விலைக்கூறல் செல்லுபடியாகும் காலம் | 2021.08.06 ஆம் திகதி வரை |

8. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கி, 14ஆம் தளம், (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பு) பிரிவின் பிரதான முகாமையாளரை 0112544310 / 0112430268 / 0112204270 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வாயிலாகத் தொடர்புகொள்ளவும்.

**முக்கியம்**

1. ஏலவிலை கூறலுக்கான நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிலைக்கூறல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டுத் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்படும்.
2. ஏலவிலை கூறுபவர் இலங்கை வங்கியில் தொழில் புரியும் எந்தவொரு தனிநபரினதும் கணவன் / மனைவி அல்லது உடன் சொந்தக்காரர் இல்லை எனவும், பங்காளராயின் பங்காளரின் கணவன் / மனைவி அல்லது உடன் சொந்தக்காரர் இல்லை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமாயின் இயக்குனர் கணவன் / மனைவி அல்லது உடன் சொந்தக்காரர் இல்லை எனவும், அத்தாட்சிப்படுத்த வேண்டும்.
3. ஏலவிலை கூறுபவர் அனுமதி பெற்ற அத்தாட்சியை ஆதாரமாக பிற்சேர்க்கையுடன் இணைக்க வேண்டும். (தேவைப்படின் அங்கீகாரப் பத்திரம் / குழுத் தீர்மானத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல்)
4. PCA 3 படிவமானது ஏலவிலைக்கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர்,
தொகுதி பெறுகைக் குழு,
இலங்கை வங்கி,
சொத்துக்களும் சேகரிப்புப் பிரிவு,
14ஆம் தளம், தலைமையகக் கட்டடம்
"BOC சதுக்கம்", இல. 01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# ஊடகவியலாளர்களுக்கு புது வருட பரிசு

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாணத்திலுள்ள ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கண்டி ஆளுநர் காரியாலயத்தில் அண்மையில் ஒழுங்கு செய்திருந்தார். இதன் போது ஊடகவியாளர்களுக்கு புது வருட நல்வாழ்த்துக்களைத் தனித்தனியே ஆளுநர் தெரிவித்ததுடன் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான புத்தாண்டுப் பரிசுகளையும் வழங்கினார்.

# இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கத் தயாராகும் புதிய அலை கலை வட்டம்

கலை இலக்கிய துறைகளில் ஆர்வமுள்ள இளங்கலைஞர்களுக்கு வாய்ப்புகளை அளிக்க புதிய அலை கலை வட்டம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் முதற்கட்டமாக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் இளைஞர்கள், யுவதிகளுக்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவுள்ளன.

புதிய அலை கலை வட்டத்தின் தற்போதைய நிர்வாகம் அதன் அமைப்பு நடவடிக்கைகளை குழுமங்களாகப் பிரித்து அதனூடாக அந்தந்த துறைசார் ஆர்வலர்களை இணைத்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இந்த வகையில் நடிகநடிகையர்கள் குழாம், விவாதிகள்குழாம், கவிஞர்கள்குழாம், நடனக் குழாம், மற்றும் இசைக்கலைஞர்கள் குழாம் என்பவற்றை உருவாக்கியுள்ளது. இத்தகைய குழாம்களில் இணைந்து கொள்வதன் மூலம் இளங்கலைஞர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர்வதுடன் தேசிய ரீதியிலான போட்டிகளில் கலந்து கொள்ளவும் வாய்ப்புகளும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவற்றில் நீங்கள் விரும்பும் துறையில் இணைந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் புதிய அலை கலைவட்டம் இல 64/145 சங்கமித்தை மாவத்தை கொழும்பு13 என்ற அஞ்சல் முகவரியுடனும் puthiyaalaikalaivaddam1980@gmail.comஎன்ற ஈமெயில் மூலமும் தொடர்பு கொள்ளலாம். மேலதிக விபரங்களைப் பெற 0722780276, 0766249108, 0776274099, 0777412604, என்ற அலைபேசி இலக்கங்களூடனும் தொடர்பு கொள்ளலாம்.

# ஹற்றனில் சீரற்ற காலநிலை



ஹற்றனில் நேற்று மாலை பெய்த கடும் மழை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வீதியில் சுமார் ஆறு அங்குலதிற்கு மேல் வெள்ளம் வீதியில் வழிந்தோடியதனால் மக்கள்' பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனால் பொது போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது சில முச்சக்கர வண்டிகள் வெள்ளத்தில் இறுகிய நிலையில் காணப்பட்டது.

வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளாகினர். இது குறித்து மக்கள் கருத்து தெரிவிக்கும் போது

பல வருடகாலமாக இந்த வீதியில் இவ்விடத்தில் மழை பெய்யும் போதெல்லாம் வாகன போக்குவரத்து தடைப்படுவதுடன் பொது மக்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. இதே போன்று ஹற்றன் பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் உள்ள டிக்கோயா வீதியிலும் இந்நிலை காணப்படுகின்றது ஆனால் இதனை எவரும் கண்டு கொள்வதாக தெரிவதில்லை பாராளுமன்ற அமைச்சர்கள் முதல் நகரசபை உறுப்பினர்கள் வரை இந்த வீதியில் செல்கின்றனர். ஆனால் அவர்களின் கண்ணுக்கு இந்த சிறிய பிரச்சினை தெரிவதில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் 09 வயது பாடசாலை மாணவி இந்த வீதியில் சென்று கொண்டிருக்கும் போது வெள்ளத்தில் அகப்பட்டு உயிரிழந்தார். சடலம் கூட இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் கிடைத்தது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இன்னும் இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. எனவே இது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் புத்தரிசி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (14) புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம்: நுவரெலியா தினகரன் நிருபர்)

# இளம் வர்த்தகருக்கு பேண்தகு சூரர் கௌரவ விருது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டியைச் சேர்ந்த இளம் வர்த்தகர் பசன் சந்திரசேககரவிற்கு 'திர சாரசூரி (பேண்தகு சூரர்) என்ற கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.(12)

'சன்போ குலோபல் பெடரேசன்' என்ற அமைப்பு இதனை வழங்கியுள்ளது. இவர் இலங்கையிலுள்ள 45 வர்த்தக அமைபுக்களின் தலைவராக செயற்பட்டு பல்வேறு சேவைகளைப் புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







மத்துகம மத்தியஸ்த சபையின் இம்முறை தலைவராக M.A.ஜகத் துஷாரவும், உப தலைவராக ஜகத்தும் உறுப்பினர்களாக K.K.கனகர், நவீந்திரன், அத்தாஸ் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.







தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லாசி வேண்டி சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் தலைமையில் தமிழ் கலைஞர்கள் கொழும்பு கொட்டாஞ்சேனை, வீரமகா காளியம்மன் ஆலயத்தில் விசேட பூஜையை நடத்தியதுடன் சுரேஸின் இல்லத்தில் புத்தாண்டு கேக் வெட்டினர். இதில் கலைஞர்களான கே. ஈஸ்வரலிங்கம், கலைசிறி, விஜே ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கண்ணகி கலாலயத்தின் சேலை வழங்கும் நிகழ்வு





கண்ணகி கலாலயம் ஏற்பாட்டிலும் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் அமைப்பின் அனுசரணையிலும் தமிழ் சிங்கள மற்றும் தெலுங்கு உகாதி புத்தாண்டை முன்னிட்டு 200 பெண்களுக்கு இலவச சேலை வழங்கும் வைபவம் கொழும்பு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நீதி அமைச்சின் பொதுஜனத் தொடர்பு ஒருங்கிணைப்பு செயலாளர், சட்டதரணி நளின் சமரகோன், அரசியல் பிரிவு ஒருங்கிணைப்பு செயலாளர், சட்டதரணி உல்பத் உவைஸ் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக கொழும்பு பிரதேச பிரதி செயலாளர் அருணோத என் போபகமகேயும் சிறப்பு விருந்தினராக கொழும்பு பிரதேச செயலக கலை,கலாசார உத்தியோகஸ்தர் திருமதி கிறிஸ்ரி ரோஸும்பனை, தென்னை, இறப்பர் பெருந்தோட்ட அமைச்சின் வடமாகாண இணைப்பாளர் பாலச்சந்திரன் பாலரமணனும் கலந்து கொண்டனர்.

சிறப்பித்திருந்ததுடன் இந்நிகழ்வை கண்ணகி கலாலயம் உறுப்பினர் கிருஷி ஞானப்பிரகாசம் தொகுத்து வழங்கியிருந்தார்.

நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. குழந்தை இளங்கோ கலைநிலா தேவாரம் பாட கலைஞர் டாக்டர். எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கு 1 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. வரவேற்புரையை கண்ணகி கலாலய ஸ்தாபகர் ஆ.இளங்கோ நிகழ்த்த தொடர்ந்து ஏனைய கௌரவ அதிதிகளும் தமது உரையை நிகழ்த்தியிருந்தனர்.

இந்நிகழ்வை அலங்கரிக்கும் வகையில் கலைஞர் A.K இளங்கோ எழுதிய பாடலை மகள் கலைநிலா பாடியதுடன் நடிகை கிருஷாந்தியுடன் இணைந்து சேலை சம்பந்தப்பட்ட விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் வகையில் நகைச்சுவை சமூக நாடகமொன்றையும் அரங்கேற்றி இருந்தனர். கலைஞர் சந்தனம் முத்துக்குமார் பழைய திரைப்பட பாடலொன்றையும் பாடி சபையினரின் கரகோஷத்தை பெற்றதுடன் கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.


# மக்கள் வங்கி

## கூட்டிணைந்த வங்கிப் பிரிவு

### 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29வது (ஈ) பிரிவின் கீழான முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2021.02.25ஆம் திகதி நடத்தப்பட்ட தமது பணிப்பாளர் சபை கூட்டத்தில் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஈ) பிரிவின் கீழ் பின்வரும் முன்மொழிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவு இலக்கம் PV9113 கொண்ட மற்றும் பொரலஸ்கமுவ, பெபிலியான, கொழும்பு வீதி. 362ஆம் இலக்கமுடைய இடத்தில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதுமான கம்பெனியான ஒலிம்பஸ் கன்ஸ்ட்ர க்ஷன் (பிரைவேட்) லிமிட்டட் என்ற கம்பெனி கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹாவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 ஒக்டோபர் 3ஆம் திகதியிட்ட இலக்கம் 969 கொண்ட ஈட்டு முறியின் மீது அறவிடுவதற்குள்ள செலுத்தீடுகளைச் செலுத்தத் தவறியுள்ளதால் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் அறுநூற்று நாற்பத்து ஆறாயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்பது சதம் இருபத்து ஒன்பது (ஐ.அ.டொ.1,646,279.29) பணத் தொகையும் அதன் ஈட்டு முறி மீது வட்டியும் மக்கள் வங்கிக்கு அறவிடுவதற்கு நிலுவையாகவும் கிடைக்க வேண்டியதாகவும் உள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் அறுநூற்று நாற்பத்து ஆறாயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்பது சதம் இருபத்து ஒன்பது (ஐ.அ.டொ.1,646,279.29) மேற் குறிப்பிட்ட பணத் தொகையும் 2021 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் விற்பனை திகதி வரை ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் நாநூற்று எழுபத்து எட்டாயிரத்து எண்நூற்று அறுபது சதம் இருபத்து எட்டு (ஐ.அ.டொ. 1,478,860.28) பணத் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு எட்டு தசம் ஐந்து பூஜ்யம் வீதம் (வரு. 8.50%) மேலதிக வட்டியுடனும் மற்றும்/அல்லது மக்கள் வங்கி சட்டத்தின் 29(ஓ) பிரிவின் கீழ் அறவிடக்கூடிய கட்டணங்கள் மற்றும் பணத்தொகை என்பவற்றுடன்இ அதன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை செலுத்தப்பட்டிருந்தால் அதைக் கழித்து அறவிட்டுக் கொள்ளுவதற்காக கொழும்பு பகிரங்க நொத்தாரிஸ் டீ.எஸ். மஹவத்த அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2018 ஒக்டோபர் 3ஆம் திகதியிட்ட இலக்கம் 969 கொண்ட மேற்குறிப்பிட்ட ஈட்டு முறியின் மூலம் மேற்படி வங்கிக்கு ஈடுவைத்துள்ள மற்றும் இதன் கீழே அட்டவணையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ள இயந்திரங்களையும் வாகனங்களையும் கொழும்பு 8, பெயார்பீல்ட் பூங்கா இலக்கம் 6 ஏ என்ற இடத்தில் வதியும் அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர் திருவாளர்கள் ஷொக்மன் மற்றும் சமரவிக்கிரம மூலம் விற்பதற்கு இத்தால் முன்மொழிந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

அந்த இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

1. Concrete yard Machines
   - 1.1 Single Girder Gantry Crane with Cable Drum, நாடு - சீனா விலை - ஐ.அ.டொ. 34,160 வருடம் - 2017
   - 1.2 Double Girder Gantry Crane with Cable Drum, நாடு - சீனா விலை - ஐ.அ.டொ. 126,480 பொருள் 2, வருடம் - 2017
   - 1.3 W.H. Beam Launcher IQ மொத்த நீளம் மீற்றர் 66 நாடு - சீனா விலை - ஐ.அ.டொ. 165,900 வருடம் - 2017
   - 1.4 W.H. Bridge Girder போக்குவரத்து வாகனம் QIK120T3OM நாடு - சீனா விலை - ஐ.அ.டொ. 28,900 வருடம் - 2017
2. Concrete Batching Plant with 2 Cement Silos, Water Treatment Plant, Loading Vassals Control Panel and Switch Board, நாடு - சீனா விலை - ஐ.அ.டொ. 150,000 வருடம் - 2017 உடுகம்மன கிரிஉல்லவில் பொருத்தப்பட்டுள்ளது.
3. Post Tension Machine with 12 Nos. Stressing Anchorage MISA12 Nos.900.8 Nos, Stresssing Anchorage M 15A8 Nos.600, Tool Anchor G 15-12T 3 Nos, Total Anchor G 15 -8T 3Nos, Grouting Cap M15-12 10Nos, Grouting Cap M15-8 IO Nos, Working Wedge 50 Nos, Total Wedge 50 Nos, Hydraulic Jack 4 Nos, Pump Nos 3, Grouting pump, Mixture, Round Duct Machine Round Duct Mould, Galvanized Steel Strip, மொத்த விலை - ஐ.அ.டொ. 64,354
4. Diesel Generator, Model LSC22053, விலை - ஐ.அ.டொ. 19,900 வருடம் - 2017 நாடு - சீனா
5. Hydraulic Excavator Breakers, 2 Nos,Model TGP 200 விலை - ஐ.அ.டொ. 29,900 பொருள் 2, வருடம் - 2017
6. Bobcar 2 Nos. Brand New, Skid steel Loader, விலை - ஐ.அ.டொ. 56,560
7. Backhoe Loader Brand New, MODEL Case 851EX விலை - ஐ.அ.டொ. 47,667, வருடம் - 2017
8. Crushing and Screening Plant,200TP Closed Circuit, Fully Automatic Jaw Cone Type Crushing and Screening plant with Six Conveyor Belts UD 327000, நாடு - இந்தியா வருடம் - 2018 இயந்திர உபகரணம் கிரிஉல்லமாலகமுவவில் ஜெனரேட்டருடன் பொருத்தப்பட்டுள்ளது.

I) Asoka Leland io Wheeler Tippers IO Nos புத்தம் புதிய வாகனங்கள்

பொருள் 1

| | பதிவு இலக்கம் | என்ஜின் இலக்கம் | செசி இலக்கம் | தயாரித்தது | மாதிரி |
|---|---|---|---|---|---|
| 9. | WP/LN/3465 | HFHZ408299 | MBIHTLFD3HRETO274 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 10. | WP/LN/3471 | HFHZ408574 | MBIHTLFD6HRES9359 | Lanka Asoka Leyland | - |
| 11. | WP/LN/3468 | HFHZ405759 | MBIHTLFD8HRETO271 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 12. | WP/LN/3472 | HFHZ406748 | MBIHTLFDXHRFS6676 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 13. | WP/LN/3470 | HFHZ407134 | MBIHTLFDXHRETO188 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 14. | WP/LN/3469 | HFHZ405755 | MBIHTLFDXHRESO191 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 15. | WP/LN/3463 | HFHZ408581 | MBIHTLFDXHRETO272 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 16. | WP/LN/3474 | HFHZ404467 | MBIHTLFD9HRETO084 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 17. | WP/LN/3467 | HEHZ411767 | MBIHTLFDXHRETO627 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 18. | WP/LN/3773 | HFHZ400107 | MBIHTLFDXHRGS2615 | Lanka Asoka Leyland | TAURUS 2518 |
| 19. | WP CAX-2158 | 170328WI071204DTA | SALRA2AN5HA014114 | Land Rover | Discovery |
| 20. | WP LN-5003 | E613CDHB 125584 | MC2K7ERCOHB056292 | EICHER | TERRA 16 |
| 21. | WP LN-5004 | E613CDHB 125125 | MC2K7ERCOHBO56219 | EICHER | TERRA 16 |
| 22. | WP LN-5005 | E613CDHB 125529 | MC2K7ERCOHBO56294 | EICHER | TERRA 16 |
| 23. | WP LN-5006 | E613CDHB 125432 | MC2K7ERCOHB056295 | EICHER | TERRA 16 |
| 24. | WP LN-5007 | E613CDHB 125596 | MC2K7ERCOHB056289 | EICHER | TERRA 16 |
| 25. | WP LN-5009 | E613CDHB 125601 | MC2K7ERCOHBO56290 | EICHER | TERRA 16 |
| 26. | WP LN-5010 | E613CDHB 125619 | MC2K7ERCOHBO56296 | EICHER | TERRA 16 |
| 27. | WP LN-5011 | E613CDHB 125552 | MC2K7ERCOHBO56285 | EICHER | TERRA 16 |
| 28. | WP LN-5121 | E613CDGGO99537 | MC2K1ERCOGGO51516 | EICHER | TERRA 16 |
| 29. | WP LN-5122 | 613CDGGO99548E | MC2K1ERCOGGO51515 | EICHER | TERRA 16 |
| 30. | | 170328W1071204DTA | MC2K7ERCOHB056285 | Land Rover Discovery (Jeep) | SALRA2AN5H |

II) டிப்பர் பொருள் 10 மற்றும் டிஸ்கவரி லேண்ட்ரோவர்

இவை பொரலஸ்கமுவ, பெபிலியான, கொழும்பு வீதி. இலக்கம் 445, 1/2 கொண்ட வளாகத்தில் இந்த உடன்படிக்கை தொடர்ச்சியாக இருக்கின்ற அதேவேளையில் அந்த இயந்திரங்களை கொண்டு செல்லுகின்ற அல்லது அகற்றிச் செல்லுகின்ற எந்தவொரு வேறு வளாகத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பிரதிப்பொது முகாமையாளர் (அறவீடுகள்),**
**மக்கள் வங்கி, அறவீடுகள் பிரிவு, 10வது மாடி,**
**தலைமை அலுவலக கட்டிடம்,**
**இலக்கம் 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,**
**கொழும்பு 2.**
2021 பெப்ரவரி 03

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 ஏப்ரல் 16 வெள்ளிக்கிழமை



# ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஹைதராபாத்தை வீழ்த்தி

# பெங்களூர் அணி திரில் வெற்றி

14வது ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் நேற்றைய 6வது லீக் ஆட்டத்தில், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் மோதின

14வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா சென்னை, மும்பை ஆகிய நகரங்களில் தற்போது நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளேஓப்' சுற்றுக்கு முன்னேறும்.

இந்த நிலையில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த 6வது லீக் ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. பெங்களூர் அணியில் ஒரு மாற்றமாக ரஜத் படிதர் நீக்கப்பட்டு, கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு வந்த தேவ்தத் படிக்கல் சேர்க்கப்பட்டார். ஹைதராபாத் அணியில் சந்தீப் ஷர்மா, முகமது நபிக்கு பதிலாக ஷபாஸ் நதீம், ஜேசன் ஹோல்டர் இடம் பிடித்தனர்.

'நாணயச் சுழற்சியில்' வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வோர்னர் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதன்படி முதலில் 'துடுப்பெடுத்தாட' தீர்மானித்தற்கு பெங்களூரு அணியின் தொடக்க ஆட்டக்காரரர்களாக தலைவர் விராட்கோலி, தேவ்தத் படிக்கல் ஆகியோர் களம் கண்டனர். முதல் ஓவரை வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் வீசினார். அந்த ஓவரில் 2வது பந்தை விராட்கோலி பவுண்டரிக்கு விரட்டி ஓட்டக் கணக்கை தொடங்கினார். அடுத்த ஓவரில் 2 பவுண்டரிகள் விளாசிய தேவ்தத் படிக்கல் (11 ஓட்டங்கள்) புவனேஷ்வர்குமார் பந்து வீச்சில் 'பிடி' கொடுத்து விரைவில் நடையை கட்டி ஏமாற்றம் அளித்தார்.



அடுத்து வந்த ஷபாஸ் அகமது அதிரடியாக ஒரு சிக்சர் தூக்கினார். பவர்பிளேயான முதல் 6 ஓவரில் அந்த அணி ஒரு விக்கெட்டுக்கு 47 ஓட்டங்கள் எடுத்தது. அடித்து ஆடிய ஷபாஸ் அகமது (14 ஓட்டங்கள்) ஷபாஸ் நதீம் பந்து வீச்சில் ரஷித் கானிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அடுத்து மெக்ஸ்வெல் களம் இறங்கினார். சீரான இடைவெளியில் விக்கெட் வீழ்ந்ததால் அந்த அணியின் 'ஓட்டவிகிதம்' மெதுவாகவே நகர்ந்தது.

முதலில் நிதானத்தை கடைப்பிடித்த மேக்ஸ்வெல் 11வது ஓவரில் ஷபாஸ் நதீம் பந்து வீச்சில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசி அசத்தினார். நிலைத்து நின்று ஆடிய விராட்கோலி 33 ஓட்டங்களில் (29 பந்து, 4 பவுண்டரி) ஜேசன் ஹோல்டர் பந்து வீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். அவர் தூக்கி அடித்த பந்தை பவுண்டரி எல்லையில் விஜய் சங்கர் அருமையாக பிடி எடுத்தார். சுழற்பந்து வீச்சில் கலக்கிய ரஷித் கான் தனது அடுத்தடுத்த ஓவர்களில் டிவில்லியர்ஸ் (1 ஓட்டம்), வாஷிங்டன் சுந்தர் (8 ஓட்டங்கள்) விக்கெட்டை கைப்பற்றினார். அடுத்து வந்த டேன் கிறிஸ்டியன் (1 ஓட்டம்) நடராஜன் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் விருத்திமான் சஹாவிடம் 'பிடி' கொடுத்து வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினார்.

இறுதி கட்டத்தில் மெக்ஸ்வெல் அடித்த பவுண்டரி, சிக்சரால் அந்த அணி சற்று சவாலான ஸ்கோரை எட்டியது. கடைசி ஓவரில் ஜேசன் ஹோல்டர் 2 விக்கெட்டுகளை சாய்த்தார். முதல் பந்தில் கைல் ஜாமிசன் (12 ஓட்டங்கள்) வீழ்ந்தார். ஐ.பி.எல். தொடரில் 4 ஆண்டுகளுக்கு பிறகு அரைசதம் அடித்த மெக்ஸ்வெல் (59 ஓட்டங்கள், 41 பந்து, 5 பவுண்டரி, 3 சிக்சர்) கடைசி பந்தில் விக்கெட் காப்பாளர் விருத்திமான் சஹாவிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 8 விக்கெட்டுக்கு 149 ஓட்டங்கள் எடுத்தது. ஹைதராபாத் அணி தரப்பில் ஜேசன் ஹோல்டர் 3 விக்கெட்டும், ரஷித் கான் 2 விக்கெட்டும், புவனேஷர்குமார், ஷபாஸ் நதீம், நடராஜன் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினார்கள். பின்னர் 150 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஹைதராபாத் அணியின் தொடக்க ஆட்டக்காரர் விருத்திமான் சஹா (1 ஓட்டம்) முகமது சிராஜ் பந்து வீச்சில் பிடி கொடுத்து விரைவில் 'அவுட்' ஆனார். அடுத்து மனிஷ் பாண்டே, தொடக்க ஆட்டக்காரரும், தலைவருமான டேவிட் வோர்னருடன் இணைந்தார். இருவரும் நிதானமாகவும், அதேநேரத்தில் நேர்த்தியாகவும் அடித்து ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்திய வண்ணம் இருந்தனர். அணியின் ஸ்கோர் 96 ஓட்டங்களாக இருந்த போது (13.2 ஓவர்) டேவிட் வோர்னர் 54 ஓட்டங்களில் (37 பந்து, 7 பவுண்டரி, ஒரு சிக்சர்) கைல் ஜேமிசன் பந்து வீச்சில் டேன் கிறிஸ்டியனிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 17வது ஓவரில் ஷபாஸ் அகமது தனது மாயாஜால சூழலில் ஜேனி பேர்ஸ்டோ (12 ஓட்டங்கள்), மனிஷ் பாண்டே (38 ஓட்டங்கள், 39 பந்து, 2 பவுண்டரி, 2 சிக்சர்), அப்துல் சமாத் (0) ஆகிய 3 விக்கெட்டுகளை சாய்த்து திருப்பு முனை ஏற்படுத்தினார். அடுத்து வந்த விஜய் சங்கர் 3 ஓட்டங்களிலும், ஜேசன் ஹோல்டர் 4 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தனர். கடைசி ஓவரில் ஹைதராபாத் அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரை வேகப்பந்து வீச்சாளர் ஹர்ஷல் பட்டேல் வீசினார். கடைசி ஓவரில் 2 விக்கெட்டுகளை பறிகொடுத்த அந்த அணி 9 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது. ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 143 ஓட்டங்களே எடுத்தது. இதனால் பெங்களூர் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. பெங்களூர் அணி தொடர்ச்சியாக பெற்ற 2வது வெற்றி இதுவாகும். ஹைதராபாத் அணிக்கு இது 2வது தோல்வியாகும்.



## டெல்லி கெப்பிட்டல்ஸ் வீரர் அன்ரிச் நோர்டியா கொரோனாவால் பாதிப்பு

டெல்லி கெப்பிட்டல்ஸ் வீரர் அன்ரிச் நோர்டியாவுக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

ஐ.பி.எல். போட்டிக்கான டெல்லி கெப்பிட்டஸ் அணியில் இடம் பிடித்துள்ள தென்ஆபிரிக்காவை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்டியா கடந்த 6ம் திகதி மும்பை வந்து 7 நாட்கள் தனிமைப்படுத்துதலை கடைப்பிடித்தார். பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் இருந்து பாதியில் விலகிய அவர் சக வீரர் காஜிசோ ரபடாவுடன் இணைந்து இந்தியா வந்தார். இந்த நிலையில் தனிமைப்படுத்தலின் போது அன்ரிச் நோர்டியாவுக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய கிரிக்கெட் சபை கொரோனா தடுப்பு நடத்தை விதிமுறையின் படி அவர் 10 நாட்கள் தனிமைப்படுத்துதலில் இருக்க வேண்டும். அப்போது அவரிடம் கடைசி 2 நாட்கள் உட்பட 5 முறை கொரோனா பரிசோதனை நடத்தப்படும். அதில் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பதை குறிக்கும் 'நெகட்டிவ்' முடிவு வந்த பிறகு தான் களம் இறங்க முடியும். நோர்டியா கடந்த சீசனில் 16 ஆட்டங்களில் ஆடி 22 விக்கெட்டுகள் வீழ்த்தியதுடன், அதிவேகமாகவும் பந்துவீசி அசத்தினார். அவர் ஆடமுடியாமல் போய் இருப்பது டெல்லி அணிக்கு பின்னடைவாகும். ஏற்கனவே டெல்லி அணியின் சுழற்பந்து வீச்சாளர் அக்ஷர் பட்டேல் கொரோனா பாதிப்புக்கு ஆளானது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் கிண்ண பிறீமியர் லீக் கிண்ணத்தினை 2017 ஆம் ஆண்டு அணி கைப்பற்றியது






**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய பழைய மாணவர்களுக்கிடையில் 04.04.21 அன்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஈஸ்டர் கிண்ண பிறீமியர் லீக் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கிலும் பாடசாலையின் வளர்ச்சி கருதியும் பிரித்தானியா,பிரான்ஸ்,கனடா நாடுகளில் உள்ள பழைய மாணவர்களின் அனுசரணையுடன் றோமன் கத்தோலிக்க வித்தயாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட 8 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

பழைய மாணவர்கள் உள்ளடக்கிய 7 அணிகள் இதில் பங்கு பற்றியுள்ளன.

காலை தொடக்கம் சுற்றுப்போட்டிகள் தொடங்கி மாலை வேளையில் இறுதிப்போட்டிக்கு 2017 ஆண்டு பழையமாணவர் அணியும், திறந்த அணியினர் (ஓப்பிண்) அணியினரும் தெரிவாகியுள்ளார்கள்.

இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திறந்த அணியினர் (ஓப்பிண்) 8 ஓவர்களில் 7 விக்கட்களை இழந்து 38 ஓட்டங்களை பெற்றுள்ளார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 2017 ஆண்டு பழையமாணவர் அணியினர் 6.2 ஓவர்களில் 39 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்துள்ளார்கள்.

பரிசளிப்பு நிகழ்வு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தயாலய முதல்வர் அருட்பணி றெபின்சன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மறைக்கோட்ட குரு முதல்வரும் புனித சூசையப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தையுமான அருட்பணி அன்ரனிப்பிள்ளை அடிகளார், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபதவிசாளர் க.ஜெனமேஜயந், முல்லைத்தீவு மாவட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரியும் சமாதான நீதவானுமான அ.சற்குணராசா,ஓய்வு நிலை உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் மைக்கல் திலகராசா உள்ளிட்ட அதிதிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்பித்துள்ளதுடன் வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்கள்,கேடயங்களையும் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.